Registered No. M. 5088

ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0]   ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள்.   [தனிப்பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரி௵ வைகாசிமீ 25உ 7—6—1948 ஹிஜ்ரி 1367 ரஜப்மீ 28உ திங்கட்கிழமை. } இதழ் 20

மத அடிப்படை பிரிவினை மக்களுக்கு — நாசகரமானது. —

பாலஸ்தீன் வாசிகளுக்கே ஆளும் உரிமை.

—(மௌலானா மதனி அறிக்கை.)—

டெல்லி,
27—5—48.

ஜமீயதுல் உலமாயே ஹிந்த் தலைவர் ஷைகுல் இஸ்லாம் மௌலானா ஹுஸைன் அஹ்மத் மதனி பாலஸ்தீன் பற்றி பத்திரிகைகளுக்கு கீழ்வரும் அறிக்கை விடுத்திருக்கிறார்.

"பல அன்பர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அநேக கூட்டங்களில் தீர்மானிக்கப்பட்டு பல தடவைகளில் வெளியிடப்பட்ட பாலஸ்தீன் பற்றிய ஜமீயதுல் உலமாவின் கொள்கையை மீண்டும் ஒரு முறை தெளிவாக்க விரும்புகிறேன்."

"முஸ்லிம்கள், கிருஸ்துவர்கள், யூதர்கள் எவர்களாயிருப்பினும் பாலஸ்தீனை ஆளும் உரிமை ஜாதி மத வித்தியாசமின்றி பாலஸ்தீன் மக்களுக்குத்தான் உண்டு"

"அன்னிய குடியேற்றத்தை தடுக்கும்படியும் பல் வேறுமூலைகளிலிருந்து யூதர்களைக்கொண்டுவந்து குடியேற்றி பாலஸ்தீனில் யூதநாட்டுக்கிளர்ச்சியை வளர்க்க வேண்டாமென்று ஜமீயதுல் உலமா அடிக்கடி வற்புறுத்தி வந்திருக்கிறது. ஆயினும் ஜமீயத்தின் முயற்சிகள் வெற்றியடைய பிரிட்டன் விடவில்லை. நாளாவட்டத்தில் யூதர்களைக்கொண்டு வந்து குடியேற்றிவந்தது போதுமான அளவுக்கு யூதர்கள் குடியேறியானவுடன் பிரிவினையின் நூதனமான, நாசகரமான திட்டத்தை பாலஸ்தீன் மக்கள் முன் சமர்பித்தும் விட்டது"

"ஒரு நாட்டை ஆளும் உரிமை அந்த நாட்டு மக்களைச் சேர்ந்தது என்பது தான் ஜன நாயகம். பாதுகாப்பு கவுன்ஸிலும் இதை ஒப்புக்கொண்டிருக்கிறது ஆனால் நிர்ணயிக்கப்பட்டதொரு சர்வதேசக் கொள்கை துரதிர்ஷ்ட வசமாக பாலஸ்தீனில் புறக்கணிக்கப்படுகின்றது. அரபியர்களின் பூர்வீக உரிமையை அலட்சியம் செய்துவிட்டு நேற்று குடியேற்றப்பட்ட அந்நியர்களான யூதர்களுக்காக பாலஸ்தீன் துண்டாடப்படுகின்றது"

"இந்தியாவைப் பிரித்து இந்தியர்களுக்கு இழைக்கப்பட்ட பரிகரிக்கமுடியாத எல்லையற்ற தீங்கு இன்று மீண்டும் பாலஸ்தீனுக்கு இழைக்கப்படுகின்றது. அதனால் அங்கு ரத்தக்களரிதான் ஏற்படும்.

"பிரிட்டன் பாலஸ்தீனிலிருந்து வாபஸாகின்றது. ஒரு நாட்டுக்கு விடுதலையளித்துவிட்டு வெளியேறும்போது, அந்தநாட்டுமக்களை பரஸ்பர சண்டையில் ஈடுபடுத்தி, சுதந்திரம்பெற தகுதியற்றவர்களென்றும், இந்தியாவுக்கும், பாலஸ்தீனுக்கும் சுதந்திரம் கொடுத்து பிரிட்டன் பெரிய தவறு செய்திருக்கிறது, என்றும்சொல்லும்படியானசந்தர்ப்பத்தை ஐரோப்பிய ஆக்ரமிப்பு சக்திகளுக்கு கொடுப்பது அநியாயமாகும். மத அடிப்படையில் செய்யப்படும் பிரிவினையால் வேறுவித பலன் ஏற்பட முடியாது"

"மத அடிப்படையில் ஒரு பக்கம் இந்தியாவையும், இன்னொரு பக்கம் பாலஸ்தீனையும் பிரிவினை

மக்கள் வறுமை.

"ஏழைகளின் குடிசைகளுக்கு இதுவரை சுய ராஜ்யம் வரவில்லை. விடுதலைக்குப்பிறகு நீங்குவதற்குப் பதிலாக நாளுக்குநாள் வறுமை அதிகரித்துவருகிறது ஏழ்மையைப்போக்க உடனடியாக முயற்சிக்கப் படாவிட்டால் அமைதியின்மை பரவி பயங்கரமானதொரு கட்டத்தை நாடு எதிர்நோக்க வேண்டியிருக்கும்" என்று நாட்டின் வருமையைக் குறித்து ஆச்சார்யா வினோபா பாவே ராஜ்காட் பிரார்த்தனைக் கூட்டத்தில் பேசினார்.

சுயராஜ்யத்தால் நசுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்கள் பலனடைய வேண்டும். இல்லையேல் வெறும் அதிகாரமாற்றத்தால் மட்டும் அடிமை வாழ்வின் கஷ்டங்கள் அகன்று விடுவது சாத்தியமா?

நாடு விடுதலை பெற்று நம்மவர்கள் அதிகாரத்திலிருந்து வருகின்றனரென்று பெருமைப்பட முடியுமேயொழிய அவ்வித சுதந்திரத்தை உண்ணவும், உடுத்தவும், விரிக்கவும் முடியாது.

தன்னுடைய இஷ்டம்போல் முன்னேறி வாழ்க்கைத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ள அடிமை மனிதனால் முடிவதில்லை. எனவே அடிமை வாழ்வை மனிதன் வெறுக்கிறான்.

ஆங்கில ஆட்சியில் கிஸான்களுக்கு நிம்மதியிருக்கவில்லை பாட்டாளி பட்டினிகிடந்தான். தொழிலாளி ஒட்டாண்டியாயிருந்தான். கிழவர்கள் நிராதரவாயும், விதவைகள் நாதியற்றும் தவித்தனர். அதற்கெல்லாம் காரணமாயிருந்த அன்னிய அடிமையை நாம் வெறுத்தோம்

நாட்டின் வறுமையைப்போக்க சுதந்திரம் வேண்டும். நம்முடைய கஷ்டங்களுக்கு விடுதலையே விமோசனம் என்று நம்பினோம். எனவே அன்னிய ஆதிக்கத்தை தகர்த்தோம்.

அதிர்ஷ்டவசமாக வெற்றி கிடைத்தது. இன்று சுதந்திரமடைந்து மாதங்கள் பத்து ஆய்விட்டன. இனி நம்முடையவிதிக்கு நாமே எஜமானர்கள். ஆயினும் கண்டபலன்? அடைந்த மாறுதல்?

இந்த கேள்விகளுக்குத்தான் ஆச்சார்யா வினோபா பாவே பதிலளிக்கிறார். "ஏழைகளின் குடிசைகளுக்கு இதுவரை சுயராஜ்யம் வரவில்லை. விடுதலைக்குப்பிறகு நீங்குவதற்குப்பதிலாக நாளுக்கு நாள் வறுமை அதிகரித்து வருகிறது."

இருந்தாலும் சுதந்திரம் மட்டும் இல்லாமல் போய்விடவில்லை அதை உண்ணலாம். உடுத்தலாம். சுதந்திரம் சுதந்திரமென்று சொல்லிக்கூத்தாடலாம்.

விடுதலைக்குப்பிறகு வயிற்றுக்கு சோறுதான் சரியாய் கிடைக்கவில்லை என்றாலும் லஞ்சம் ஒழிந்ததா? சுரண்டல் கொள்ளை லாபம் தொலைந்ததா? அதிகாரவர்க்கத்துக்கு மனமாறுதல் ஏற்பட்டதா? கொலை, கொள்ளை, போன்ற அக்ரமப் படலத்துக்கு முற்றுப்புள்ளி விழுந்து அன்பு, சகோதரத்துவ உணர்ச்சி உண்டாயிற்றா? அல்லது ஒவ்வொருவனும் அறிவு, சட்டத்தின் வரம்புகளைக்கடந்து தான் தோன்றித்தனமாக நடக்க விடுதலை கிடைத்து விட்டதா?

செய்து ரத்தக்களரியில்ஆழ்த்தியயிற்று. இப்பிரச்னையில் ரஷ்ய அமெரிக்கபோக்கு மிகவும் வருந்தத்தக்கதாகும்.ஜனநாயகத்துக்கு எதிரான சுயநல அரசியல் அடிப்படையில் பாலஸ்தீன் அரபுவாசிகளின் நியாயமான உரிமைகளை புறக்கணித்தது மட்டுமின்றி யூதர்களின் அரசாங்கத்தையும் ஏற்றுக்கொண்டு விட்டன"

"பாலஸ்தீன் பிரச்னை பாதுகாப்பு கவுன்ஸிலில் இருந்து வருகிறது. கௌன்ஸிலில் தன்னுடைய பொறுப்பை உணருமென்று நம்புகிறேன். ஜனநாயக சக்திகளின் கொள்கை அடிப்படையில் தீர்ப்பளிக்குமென எதிர்பார்க்கிறேன். தங்களைத் தாங்களே ஆள ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் உரிமைஉண்டு. மதத்தின் பெயரால் ஒரு நாட்டைக் கூறு போடுவது அந்த நாட்டை அழிப்பதற்குச்சமமாகும்"

"முடிவில் இந்திய யூனியனின் தீர்க்கதரிசனமான போக்கை மெச்சுகிறேன். பாலஸ்தீன் விஷயத்தில் இந்தியா நடுநிலைமை வகிக்கின்றது அநியாயமான பிரிவினைமூலம் ஸ்தாபிக்கப்பட்ட ராஜ்யத்தை இதுவரை ஏற்கவில்லை. இனியும் தன்னுடைய புத்திசாலித்தனமான போக்கையே இந்தியா உறுதியுடன் அனுசரிக்குமென்று நம்புகிறேன். பாலஸ்தீன் விஷயத்தில் நியாயத்தை ஆதரித்து இந்திய யூனியனின் நடுநிலைமையை ஒவ்வொரு இந்தியனும் வரவேற்பான் என்றும் எதிர்பார்க்கிறேன்."

சுதந்திரத்தால் எவ்விதப் பலனுமில்லை என்ற நிலைமையைப் பொருத்துக் கொண்டிருக்க முடியும் அடிமை வாழ்வே ஆயினும் பரவாயில்லை போலிருக்கிறதே என்று மக்கள் நினைக்கும்படி நிர்ப்பந்திக்கும் வகையில் பன்மடங்காகப் பெருகிவரும் கஷ்டங்களை பொருத்துக்கொண்டிருக்க முடியாது.

சுதந்திரம் கிடைத்த மாத்திரத்திலேயே சகல கஷ்டங்களையும்போக்கி அரசாங்கம் நாட்டை சுவர்க்கமாக்கிவிட முடியாது என்பதை ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். ஆயினும் சுதந்திர நாட்டின் பிரகாசமான எதிர்காலத்தைக்குறிக்கும் சில அறிகுறிகள் இருக்கத்தான் செய்கின்றன. அம்மாதிரி நம்பிக்கை ஊட்டக்கூடிய அறிகுறிகள், சகுனங்கள் காணப்படுகின்றனவா?

பொதுவாழ்க்கையில் முதலாளிகள், ஜாகீர்தார்கள் வகித்துவரும் ஸ்தானம் நாட்டுக்கு நன்மைபயக்க முடியுமென்றும் இன்றைய நிர்வாக இயந்திரம் பொது மக்களின் வறுமையைப் போக்க முடியுமென்றும் யாராவது சொல்லமுடியுமா?

வறுமை நீங்கவில்லை யெனினும் தார்மீகத்துறையில் குறிப்பிடத்தக்க மாறுதல் ஏற்பட்டிருப்பதாகவும் விடுதலைக்குப்பிறகு செல்வமழை பொழியா விட்டாலும் தங்களைத் தாங்களே உணரக்கூடிய சந்தர்ப்பமும் உயரிய மனோபாவமும் முதல்தடவையாக மக்களுக்கு கிடைத்திருப்பதாகவும் ஆச்சார்யா வினோபா பாவே பிரசங்கத்தைக்குறித்து ஹிந்துஸ்தான் டைம்ஸ் எழுதுகின்றது.

தங்கள் சொந்த தார்மீக அடிப்படையில் அரசியலை வகுக்க விரும்பும் குறிப்பிட்ட சில பேர்வழிகளின் மனோபாவம் எவரெஸ்ட் சிகரத்தைப்போல் அவசியத்துக்கும் அதிகமாக உயர்ந்திருப்பது சாத்தியமே.

ஆயினும் வாழ்க்கை தேவைகளுக்கு திண்டாடும் ஏழைமக்கள் சம்மந்தப்பட்டரை அவ்வித பேச்சால் பிரயோஜனமில்லை. வயிற்றுப்பிரச்னையை அலட்சியம் செய்துவிட்டு ஆத்மீக, தார்மீக விஷயங்களில் கவனத்தைச் செலுத்துவதற்கு அவர்களுக்கு அவகாசமில்லை. வயிற்றுக் கொடுமைதான் ஏழைகளின் தார்மீகம்.

சுதந்திரத்துடன் தார்மீக நேர்மை சம்மந்தப்பட்டிருந்தால் இதுவரை சுயநலமும், கொடுமையும் மறைந்திருக்கும். முதலாளிகளும், ஜாகீர்தார்களும் சுரண்டலை விட்டபாடில்லை. ஏழைகள், தொழிலாளிகள் மீது இரங்காமல் இருப்பதுதான் தார்மீக நேர்மையா? லட்சக்கணக்கான மக்களை பிணங்களாக்கி குவிப்பதுதான் உயரிய மனோபாவத்தின் அறிகுறியா?

மனதை மாற்றுவது அரசாங்கத்தால் சாத்தியமில்லை, பொதுமக்களின் ஆதரவின்றி அரசாங்கம் சுதந்திரமாக இயங்கவும் முடியாது. நாட்டின் வறுமையைப்போக்க மக்கள் தங்கள் கடமையை செய்வதன்மூலம்தான் அரசாங்கத்தை பலப்படுத்த முடியும்.

மற்றவர்களை ஆதரிப்பது நமக்கு கஷ்டமாய் இருக்கின்றது. கடமையாகக் கொள்ளாததே அதற்குக்காரணம். ஏழைகளை ஆதரிப்பது கடமையென்று கொண்டால் பிறகு கஷ்டம் இருக்கமுடியாது.

ஒரு ஏழைக்கு நாலணாகொடுக்க மனம் வருவதில்லை ஆயினும் விருந்தாளிக்காக நாற்பது ரூபாய் செலவு செய்ய நாம் தயங்குவதில்லை. ஏழையை ஆதரிப்பது கடமையென்று கொள்வதில்லை. ஆகையால் தயங்குகிறோம். விருந்தாளியை உபசரிப்பது கடமையென்று நினைக்கிறோம். எனவே நாற்பது ரூபாய் சந்தோஷமாக செலவிடுகிறோம். நாலு பேர்களைக் கொண்ட ஒரு குடும்பம் ஐந்துபேர் இருப்பதாக நினைப்பதால் ஒரு ஏழை பிழைக்கமுடியும்.

இதுவரை நமக்குள் இவ்வித உயரிய மனோபாவம் ஏற்படவில்லை. ஒருஏழைக்கு செய்யும் உதவி சமுதாயத்துக்கு செய்யப்படும் உதவியென்று மக்கள் இன்னும் உணரவில்லை. நமக்குள் அவ்வித உணர்ச்சி என்று ஏற்படுமோ அன்று முதலாளிகளை முறியடிப்பதில் நாம் வெற்றியடைவோம். அன்று நாடுமுன்னேற்றமடைந்து மக்கள் சுபிட்சமடைவது சாத்தியமாகும். அன்று இந்தியர்கள் சகோதரர்களாக வாழ்ந்து அரசியல், கலாச்சார முன்னேற்றத்திற்காக உழைக்க ஏதுவாக இருக்கும்.

வரவேற்கிறோம்.

ஹிந்து முஸ்லிம் ஒற்றுமை, முன்னேற்றம், சமுதாய, ஜனநாயக சோஷலிஸ, கூட்டுக் கலாசார, அடிப்படையில் அரசியல், பொருளாதார, சரித்திரக் கதைகள், கட்டுரைகள், கவிதைகளை வரவேற்கிறோம். காகிதத்தின் ஒரு பக்கத்தில் தெளிவாக எழுதும்படி கேட்டுக் கொள்கிறோம். இதர விபரங்கள் தபால் மூலம்,

மானேஜர், ஆஸாத், கும்பகோணம்.

ஆஸாத்

தமிழ் தேசிய வாரப் பத்திரிகை.

மலர் 1 7—6—'48 திங்கட்கிழமை இதழ் 20

மறைந்து கிடக்கும் உண்மை.

அரசியல், வகுப்புக் கலவரங்களால் இந்திய முஸல்மான்களுக்கு ஏற்பட்ட உயிர், பொருள் சேதத்துக்கு ஈடு சாத்தியமில்லை. பாகிஸ்தானில் குடியேறியவர்களுக்கு முஸ்லிமல்லாதார் விட்டுவந்த சொத்துக்கள் கிடைத்திருப்பதாக நினைத்துசிலர் திருப்தியடையலாம். அப்படி நினைப்பது இஸ்லாமுக்கும் முஸ்லிம்களுக்கும் இழிவாகும். எனவே அதை நஷ்ட ஈடு என்றுகொள்வதே சரியல்ல இழந்த உயிர்களோ திரும்பி வரப்போவதில்லை. அதைப்போலத்தான் இழந்துவிட்ட மானமும் கவுரவமும். ஆயினும் இதுவரை நஷ்ட ஈட்டின் தவறான நம்பிக்கையில் முஸ்லிம்கள் இருந்து வருவதைக்குறித்து வருந்தாமலிருக்க முடியாது. அதனால் இன்றைய நிலைமையில் மறைந்துள்ள உண்மைகளை உணர்ந்து காலத்தின் போக்கை சரிவர தெரிந்துகொள்ள அவர்களால் முடிவதில்லை. எனவே வீண் நம்பிக்கைகளை விட்டு தலைவரகளின் தவறான போக்கால் முஸ்லிம்களின் ம்னப்பான்மையில் காணப்படும் குறைகளை நிவர்த்திப்பதில் கவனம் செலுத்துவதே சிறந்த பரிகாரம். தாங்கள் அதிகாரத்திலிருக்க பாகிஸ்தான் கர்த்தாக்கள் நாலரைகோடி முஸ்லிம்களை அனாதைகளாய் விட்டுச் சென்ற பிறகு ம்காடிக்கணக்கான முஸ்லிம்களுள் தாழ்மை உணர்ச்சியும், முயர்ச்சியின்மையும் ஏற்பட்டு விட்டது. ஆண்டவனை மறந்தனர். தெய்வநீதியில் நம்பிக்கை இழந்தனர். தங்கள் அண்டையில் வசிக்கும் முஸ்லிமல்லாத பெரும்பான்மையினரின் சினேக பாவமான உறவை சந்தேகித்தனர். பாகிஸ்தானின் சுயநலப் போக்கையும், அவர்களுடைய பலஹீனத்தையும் தெரிந்துகொள்ளாமல் அவர்கள்மீது மனக் கோட்டைகள் கட்டினர். இந்தியாவில் தங்கள் முன்னேற்றவழிகள் அடை பட்டிருப்பதைக் கண்டு முயற்சிதளர்ந்தது. இஸ்லாமிய ஒழுக்கத்தை அலட்சியம் செய்துவிட்டு முஸ்லிம் என்ற மனப்பான்மையில் எல்லாபிரச்னைகளையும் அணுகிமனச்சோர்வடைகின்றனர். இன்று இந்திய மூஸ்லிம்களின் அமைதியின்மைக்குக் காரணமாயிருக்கும் ஒரு சில குறைகளை உதாரணமாய் எடுத்துக்காட்டினோம். முதலில் இவ்வித குறைகளைக் களைந்து பிறகு புதிய வாழ்க்கைக்கு அடிகோலுவதால் பல சிக்கல்களிலிருந்து நாம் விடுபட முடியும். இந்தியாவில் நமக்கு எதிரி இருக்க முடியாது. நம்மை யாரும் சந்தேகிக்க மாட்டார்கள். நம்மிடம் பலவந்தவிசுவாசம் கோரவும்இடமிருக்காது. வாழ்க்கையின் புதிய அரங்கத்தில் எல்லோருடனும் சேர்ந்து முன்னேறக்கூடிய சந்தர்ப்பம் நமக்கும் கிடைக்கும். வெற்றியும் தோலவியும் நம்முடைய திறமையைப் பொருத்தே யிருக்கும். நமக்குள் மறைந்துகிடக்கும் திறமைகளைக் குறித்தோ நமக்கு அவநம்பிக்கை அறவே யில்லை. தீர்க்க தரிசனமற்ற சில தலைவர்கள் தங்கள் உடைந்த துடுப்புகளால் அரசியல் சமுத்திரத்தின் மேல்பரப்பில் காணப்படும் சிறு அலைகளை கிழிக்கும் வீண் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். நம் சமூக வாழ்க்கையின் அடிப்படையை அரித்துவரும் உண்மையான காரணத்தை அவர்கள் உணரவில்லை முஸ்லிம் ஆட்சியில் பாதுகாப்புடன் இருந்த முஸ்லிம் அல்லாத பிரஜைகளைப்போல் இந்திய டொமினியனில் முஸ்லிம்கள் அன்னிய பிரஜைகளாக வாழவேண்டுமென்று சிலர் யோசனை கூறுகின்றனர். ஒரு ஹிந்து ராஜா அல்லது மஹாராஜாவின் ஆட்சியில் அது சாத்தியமாக இருந்திருக்கலாம். ஆனால் இன்றைய ஜனநாயக லௌகீக ஆட்சியில் அதற்கு அர்த்தமேயில்லை நாலரைகோடி இந்திய முஸ்லிம் பிரஜைகள் ஓட்டுரிமை, சொத்துரிமை, பிரதிநிதித்வ உரிமை முதலிய எல்லா பிரஜா உரிமைகளையும் இழந்து பாகிஸ்தான் பிரஜைகள் என்ற நிலைமையில் இந்திய டொமினியனில் வயிற்றுப் பிழைப்புக்கு உழைத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று சொல்லுவது பைத்தியக்காரத்தனமாகும். நாலரைகோடி முஸ்லிம்கள் அதற்கு சம்மதிக்கப்போவதில்லை என்பது நிச்சயம். இந்தியா, பாகிஸ்தான் டொமினியன்கள் சிறு பான்மையினரை பாதுகாக்கும் பொறுப்பேற்க வேண்டுமென்றும், அவர்களுடைய சமூக உரிமைகள் பறிக்கப்படாத வகையில் பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டுமென்றும் சில லீடர்கள் ஓயாமல் பேசி வருகின்றனர். அவ்வித எண்ணம் எல்லாவற்றையும் விட அபாயகரமானது. இந்தியாவில் அன்னிய ஆதிக்கத்தைப் பலப்படுத்தி, இந்தியாவை நீண்ட நாள்வரை அடிமையாக வைத்திருந்து, முடிவில் கூறு போட்டு, லட்சக்கணக்கான மக்கள் கொலையுறவும், கோடிக்கணக்கான மக்கள் கவுரவமிழந்து பரதேசிகளாகத்திரியவும் காரணமாக இருந்தது, பெரும்

வாழ்வும் தாழ்வும்.

"எதுவரை தங்களைத் தாங்களே மாற்றிக்கொள்ள முயற்சிப்பதில்லையோ (அதுவரை) ஆண்டவன் ஒரு ஜாதியாரின் நிலைமையை மாற்றுவதில்லை."

—திரு குர்ஆன்.

இது ஒரு பொதுவான விதி. முஸ்லிம், முஸ்லிமல்லாதார் என்ற பாகு பாடு இதில் இல்லை. ஒரு ஜாதியாரின் மனநிலையையோ, நிலைமையையோ ஆண்டவன் மாற்றுவதில்லை. மாறுதல் அடைய விரும்பினால் அதற்காக அவர்களே முயற்சி செய்ய வேண்டும். முன்னேற்றமடைய ஆசைப்பட்டால் தங்களை உகந்த வழியில் ஈடுபடுத்த வேண்டும். ஒருவன் பயில்வானாக வேண்டுமாயின் தேகப்பயிற்சி செய்ய வேண்டிய தவசியம். உடம்பை மாலிஷ் செய்து பாதாம் அரைத்துக் கொடுக்க வானத்திலிருந்து ஒருவனும் இறங்கி வரமாட்டான். அவனேதான் செய்தாக வேண்டும்.

பிற்போக்கிலிருக்கும் ஒருசமூகம் முன்னேறுவதற்கு முதலில் ஆர்வம் வேண்டும். ஆர்வத்தில் நேர்மையும், முயற்சியில் ஊக்கமும் செயலில் உற்சாகமும் கஷ்டங்களை சமாளிக்க சகிப்புத்தன்மையும் வேண்டும். பிறகு ஆண்டவனின் வெற்றி அவனுக்கு உதவி செய்யும், இயற்கையின் சக்தி அவனை முன்னேற்றி வெற்றி மாலைசூட்டும்.

பிரார்த்தனைகளை நம்பியிருப்பதும், சில மந்திரங்களை ஜெபித்துவிட்டு திருப்தியடைவதும், முஸ்லிமாக இருப்பதே போதுமென்று நினைப்பதும் மாறுதலடைவதற்கு போதாது. முயற்சியைத்தூண்டும் பிரார்த்தனைகள் வரவேற்புக்குரியவைகளே. அப்படிக்கின்றி முயற்சியாகக்கருதப்படும் பிரார்த்தனையை வரவேற்பதற்கில்லை. வெற்றியின் திறவுகோல் முயற்சியாகும் முயற்சியால் மனிதன் தனக்காக சொர்க்கத்தையும், நரகத்தையும் தயாரிக்கிறான்.

சத்திய வான்களின் காலனி.

"நீங்கள் சத்தியவான்களுடன் சேர்ந்து இருங்கள்"

—திரு குர்ஆன்.

அமெரிக்காவில் அரபுகாலனி இருப்பதாக கேள்விப் பட்டிருப்பீர்கள். எகிப்தில் இந்திய காலனியும், அபிசீனியாவில் ஐரோப்பியகாலனியும் இருக்கின்றன. ஒரு தேசத்தினர் அல்லது ஜாதியினர் ஒரேயிடத்தில் சேர்ந்துவாழஆரம்பித்துவிடுகின்றனர். அதனால்அவர்களுடைய கூட்டுக் கலாச்சாரம், பாஷை, பரஸ்பர உறவு, கொடுக்கல் வாங்கல் முதலிய விஷயங்களில் சௌகரியம் ஏற்படுகின்றது. அத்துடன் ஒரு ஜாதியினர் ஒருவரை ஒருவர் பார்த்து அடையாளம் தெரிந்து கொள்ளுவதும் சுலபமாகின்றது. ஆனால் நேர்மை உள்ளவர்கள், சத்தியவான்களின் காலனியை நீங்கள் பார்த்ததுண்டா? அல்லது கேள்விப்பட்டதுதான் உண்டா? நெறிமுறை தவறாத நடத்தையால் மற்றவர்களுக்கு வழி காட்டுவதற்காக சத்தியவான்களின் காலனியை அமைக்க எப்பொழுதாகிலும் முயற்ச்சி நடந்ததுண்டா? சத்தியவான்கள் பொய்யர்களை விட்டு தனித்திருக்க வேண்டுமென்றும் ஒன்றுகூடி சகோதரர்களாக வாழ வேண்டுமென்றும் இஸ்லாம் விரும்புகின்றது. அந்த காலனிக்கு சத்தியமே அடையாளமாக இருக்கவேண்டும். சத்தியவான்களின் காலனி எங்கே இருக்கின்றது? எவ்வளவு தூரம் இருக்கின்றது? என்று ஜனங்கள் கேட்டுத் தெரிந்து கொள்ள வேண்டும்.

குறுகிய தேசிய வாதமும், பொய்யான சமூகப் பற்றும், மனிதனை உண்மையுள்ளவனாக இருக்கவிடுவதில்லை ஆனால் சத்தியமே எல்லாவற்றையும் விட சிறந்த செல்வமென்றும், சமுதாயத்தினர் சமூகத்தினரை விட்டு சத்தியவான்களின் நண்பர்களாக இருங்கள் என்றும், இஸ்லாம் சொல்லுகின்றது. உண்மை, உங்களையும், உங்கள் சமூகத்தையும் கௌரவமளிக்கும் எல்லா துன்பங்களிலும் உங்களுக்கு உதவி செய்யும்.

பான்மை, சிறுபான்மைஎன்ற எண்ணமேயாகும். இன்றைக்கும் நாலரைகோடி மக்களை சந்தேகத்துக்கும் அவநம்பிக்கைக்கும் இலக்காக்கி, பீதி, அமைதியின்மைக்கு உள்ளாக்கியிருப்பதும் அதே எண்ணந்தான். இந்தியாவின் உள்ளத்தில் விஷம் தோய்ந்த முள்போல் உறுத்திக்கொண்டிருக்கும் சிறு பான்மை, பெரும பான்மை என்ற எண்ணம் இந்திய வாழ்க்கையையே விஷமயமாக்கிவிட்டது. இந்திய அரசியல் நிர்ணய சபையால் புகுத்தப்பட்டிருக்கும் சில விதிகள் இந்த வியாதியை சாஸ்வதமாக்கிவிட்டன. வகுப்புவாதத்தைப் போக்குவதற்கு இந்தியா, பாகிஸ்தான் இரண்டிலும் மத அடிப்படையில் மெஜாரிடி, மைனாரிடி என்றவேற்றுமை முதலில் ஒழித்துக்கட்டப்படவேண்டும் திறமைக்குத் தகுந்தவாறு உரிமை வழங்கப்பட வேண்டும். இந்தியா ஒரு ஜனநாயக நாடு. மத அடிப்படையற்ற ஜனநாயக ஆட்சியே அதன் லட்சியம். ஜனநாயக நாட்டில் பெரும்பான்மை மக்களின் ஆதரவு பெற்றவர்கள். அதிகாரத்திலிருப்பர். சட்ட சபையில் எதிர்கட்சியாக இருப்பவர்கள் சிறுபான்மையினராகக் கருதப்படுவர். மத அடிப்படையில் பெரும்பான்மை, சிறுபான்மையென்ற பாகு பாட்டுக்கு ஜனநாயகத்தில் இடமில்லை. ஆனால் இன்று இந்தியாவில் சிறுபான்மையினரென்ற வார்த்தையை தங்களுடைய நலனுக்கு உகந்த வழியில் பிரயோஜனப் படுத்திக்கொள்ள பெரும்பான்மை ஹிந்துக்கள் விரும்புகின்றனர். சிறுபான்மை சமூகமென்று பிதற்றித்திரியும் முஸ்லிம் லீடர்கள் பெறும்பான்மையினரின் கையில் தவறான ஆயுதத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கின்றனர். வெள்ளையர்களாலும், லீக் லீடர்களாலும் தோற்றுவிக்கப்பட்ட சிறுபான்மை, பெறும் பான்மை என்ற பழைய மனப்பான்மையை விட முடியாமல் இந்திய முஸ்லிம்கள் பெறும் நஷ்டத்துக்கு இலக்காகி இருக்கின்றனர் முஸ்லிம்கள் இதை உணருவார்களா? தங்களுக்குத் தாங்களே இழைத்து வரும் தீங்கை தெரிந்துகொள்வார்களா? இந்தியப் பிரிவினை, இரு சமுதாயக் கொள்கையால் ஏற்பட்டிருக்கும் வருந்தத்தக்க நிலைமையை சரிவர புரிந்துகொண்டுஉகந்தவழியில் நடந்துகொள்வார்களா!

சாந்தி நிலவ வேண்டும்.

—(K. B. S. மணி.)—

இன்றைய சகாப்தத்தின் உன்னத புருஷர் என்று மஹாத்மாவை அகில உலகமும் ஒரே கம்பீர மான குரலில் அழைக்கின்றது. அவரது மறைவு குறித்து உலகம் துக்கிக்கிக்கின்றது. கத்தியின்றி யுத்தமின்றி இந்திய சுதந்திரத்தை, குறிப்பாக ஆசியா வின் கௌரவத்தையும் காத்த மஹான் தற்போது நிலவுகின்ற விபரீத வகுப்புவாத ரத்தவெறி பேய்க்கு இலக்கானர் என்பது நினைக்க மனம் பதறுகின்றது

பல தலைமுறைகளுக்கு ஒருவராக உலகிலே அவ தரித்து, பேருபதேசம் புரிந்தும், பெரும்பணியாற்றி யும் மறைந்த உலகப் பெரியார்களைப் போலவே மஹாத்மா காந்தியும் 'காலத்'தின் அடிச்சுவட்டைப் பின்பற்றினரா ?

வகுப்புவாத இருளில் இந்தியா மூழ்கியிருக்கை யில், அறியாமைப்படுகுழியில் உலகம் அழுந்தியிருக்கை யில், வல்லரசுகளின் சமயோஜித சூழ்ச்சிக்கு உலகம் பலியாகிக்கொண்டிருக்கையில் மஹாத்மாவின் மனம் பூ உலகின் நிலைகண்டு புண்பட்டு நின்றது. பொய்யும், போலித்தனமும், பகட்டும் செருக்கும் அணியாக உள்ள வீணர்களின் விஷக்கோட்டத்தினின்று நாட் டினரைக் காப்பாற்ற தன் இணையற்ற உயிரை ஈந்தார்.

சத்தியம் மறைந்து, வகுப்பு வேற்றுமை உண் டாகி, கொலை வெறியெழுந்து குமுறிய நேரத்திலே, அன்பொழுக உபதேசம் செய்து வகுப்பு வெறியர் களின் மனதை மாற்றினர்.

பாழும் விதி சதி செய்து ஹிந்துக்களின் ஒப்புயர் வற்ற தலைவனை, முஸ்லிம்களின் நம்பிக்கையுள்ள உப காரியை, ஹரிஜனங்களின் தோழனை, உலகத்தின் ஒப் புயர்வற்ற பிதாவை நாதுராம் கோட்ஸே மூலம் பழி தீர்த்துக்கொண்டது.

உலகின் ஒவ்வொரு மூலை முடுக்குகளிலிருந்தும் மஹாத்மா ஆன்மாவுக்கு வணக்கச் செய்திகள் வந்து குவிந்தன. மிக உயர்ந்த தலைவர்கள் அதிகாரிகளி லிருந்து சாதாரண மக்கள் வரையில் எல்லோரும் அவருக்கு மரியாதை செலுத்தி யிருக்கின்றனர் அவர் நமது வாழ்க்கையிலே, மனத்திலே ஒவ்வொரு வகையிலும் பரிணமித்திருக்கிறார். ஆனல் கடமை யிலிருந்து நாம் பிறழ்கிறோம். நாம் அவருக்கு செய்ய வேண்டியது அவர் காட்டிய வழியை பின்பற்றுவதும் வாழ்விலும் சாவிலும் நம்முடைய கடமைகளை சரிவர செய்வதும் ஆகும்;

காந்திஜி மறைந்துவிட்டார், இந்திய முஸ்லிம் கள் உண்மையான ஒரு நண்பனையும் உலகம் பெரிய சமாதான தூதரையும் இழந்துவிட்டது. ஆனல் அவருடைய ஆத்மஜோதி நம்மை சூழ்ந்து பரிண மித்துக்கொண்டிருக்கிறது. இப்போது நம்மீதே பாரம் ஏற்பட்டிருக்கிறது. இந்த பாரத்தை — கடமையை செய்துமுடிக்க நாம் நம் சக்திக்கேற்ற முழு அளவுக்கும் பாடுபடவேண்டும். நமது தலை முறையில் தலை சிறந்த மனிதரைக்கொன்ற அந்த பாழும் வகுப்புவாதக் கொடும் விஷத்தை நாம் ஒன்று பட்டு நின்று ஒழித்துக்கட்டவேண்டும். தவருன போக்கில் செலுத்தப்பட்ட தனிப்பட்டவர்களின் பால் துவேஷம் கொள்ளாமல் அதை வகுப்புவாத பயங்கரப்பேயின் விசித்திர விளையாட்டால் நேர்ந்த விளைவு என்று நினைத்து அந்தப்பேயின் உருவமே தெரி யாமல் எதிர்த்து ஒழித்துக்கட்டவேண்டும்.

இந்திய யூனியனின் எதிர்காலத்தைவிட அதிக மாக இந்திய முஸல்மான்களின் எதிர்காலத்திலேயே அவர் மிகவும் நம்பிக்கை கொண்டிருந்தார், இந்திய முஸ்லிம்களின் பாதுகாப்பிலும் நன்மையிலும் ஆவல் கொண்ட மஹா புருஷர்.

காந்திஜி முஸ்லிம்களும், ஹிந்துக்களும் சகோ தரர்கள் போல் வாழ்ந்து ஒருவர் மதத்தை ஒருவர் கௌரவிக்க வேண்டும் என்பதற்காகவே உயிா நீத்தார். ஆகவே நம் இந்தியமக்கள் அனைவரும் அவரை கௌரவிக்கின்றனர். அவர் ஆத்மா சாந்தி யடைய சிறந்த வழியும் அதுவே.

ஆஸாத்சந்தாதாரர்களுக்கு

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

பாகிஸ்தானில் அஹ்ரார்கள்.

ஜெங்க் மலியானு, 11—5—48

"அஹ்ராரே இஸ்லாம் சார்பில் இங்கு நடந்த பொதுக்கூட்டத்துக்கு ஸாலாரே ஆஸம் முஹம்மது ஹுஸைன் காஸி தலைமை வகித்து கீழ்வருமாறு பேசினார். நம்முடைய முப்பது வருஷ போராட்டங்களும், தியாகங்களும் முடிவில் வெற்றியடைந்தன. இரண்டு நூற்றாண்டுகளாக நாம் கட்டுண்டு அடைபட்டுக் கிடந்த அடிமை கட்டடம் தகர்ந்தது. இன்று முஸ்லீம் சுதந்திரமடைந்துவிட்டான். நம்சமூகமும், தேசமும் சுதந்திரமடைந்துவிட்டது. ஒரு பெரிய தேசத்தின் வார்சுகளாகிவிட்டோம். ஆண்டவன் பரிசாக அளித்திருக்கும் திரு குர்ஆனின் உயரிய கொள்கைகளை உலகத்தில் பரப்பவேண்டியது உங்கள் கடமை. நமக்கு தாயகம் இல்லாதவரை ஒன்றும் செய்ய முடியாதென்று சொல்லப்பட்டுவந்தது. ஆண்டவன் கிருபையால் தாயகத்தையும் ஏற்படுத்திக் கொண்டோம். நம் எலும்புகள் மீது அஸ்திவாரம் நாட்டி நம் வாலிபர்களின் ரத்தத்தைக் கொண்டு அது நிர்மாணிக்கப் பட்டிருக்கிறது. பேனா பலத்தைக் கொண்டு பாகிஸ்தான் வாங்கப்பட்டிருப்பதாக சிலர் நினைக்கின்றனர். அது உண்மையானால் காய்தே ஆஜம் பம்பாயிலிருந்து கராச்சிக்கு ஓடி வந்திருக்க மாட்டார் என்பதை அவர்கள் உணரவேண்டும். பாகிஸ்தானுக்காக மிகப்பெரிய விலையைக் கொடுத்திருக்கிறோம். பத்து லட்சம் முஸ்லிம்களின் ரத்தம் சாதாரண சம்பவமல்ல உங்களுக்கு முன் திறந்து கிடக்கும் உலக சரித்திரத்தில் இதற்கு நிகரானதொரு சம்பவத்தை காட்ட முடியுமா என்று கேளுங்கள். தேசமக்கள் பரதேசிகளாகிவிட்டனர். மாளிகைகளில் வசித்தவர்கள் தொம்பர்களாக அலைகின்றனர். பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் பெண்மணிகளின் துரதிர்ஷ்டக்கதைகள் நெஞ்சைப் பிளக்கின்றன. சுய மரியாதையுள்ள சமூகத்தின் பிரகாசமான நெற்றியில் ஏற்பட்டுவிட்ட களங்கம் என்றுமே நீங்கமுடியாது. ஆயிரக்கணக்கான பெண்மணிகள் அக்ரமக்காரர்களின் கைகளில் சிக்கி இன்னும் தவித்துக்கொண்டிருக்கின்றனர். ஆயிரக்கணக்கான மசூதிகள் அலங்கோலமாய் கிடக்கின்றன. நூற்றுக்கணக்கான பெரியார்களின் சமாதிகள் நம்மை ஏசுகின்றன டில்லி ஜும்மா மசூதியில் மினாராக்கள் நம்மை சபித்துக் கொண்டிருக்கின்றன. ஷேர்ஷா சூரியின் வீரப்பிரதாபங்களைக் கொண்ட செங்கோட்டையும், தாஜ் மஹாலின் சலவைக்கல் இதழ்களும் நம்மை குறை கூறுகின்றன.........

பாகிஸ்தானில் அதிகாரத்திலிருப்பவர்கள் இது வரை நம்மை சந்தேகத்துடன் நோக்குவதைப் பார்த்து மனவேதனையடைகிறேன். நம்மை தேசத் துரோகிகள் என்கிறார்கள். பாகிஸ்தான் அரசாங்கம் இதுவரை துரோகிகளை ஏன் தண்டிக்கவில்லை என்று கேட்கிறேன். நாம் இருப்பது தேசத்துக்கு அபாயமென்று பாகிஸ்தான் அரசாங்கம் உண்மையாகவே கருதினால் எங்களை சுட்டுதள்ளும்படி சாலரே ஆஸம் என்ற முறையில் சொல்லுகிறேன்.

இஸ்லாமில் சம்பளம் என்ற பேச்சுக்கே இடமில்லை. அபூ பக்கர் சித்தீக், உமர் கத்தாப் முதலிய கலீபாக்கள் காட்டிய வழி நமக்குமுன் திறந்திருக்கிறது. அதை விட்டு ஏகாதிபத்தியம் அல்லது மார்ஷல் திட்டத்தை நாம் பின் பற்ற முடியாது. ஆயிரக்கணக்கில் சம்பளம்பெற நம்முடைய மந்திரிகளுக்கு உரிமையில்லை.

பிறகு மௌலானா அப்துல் ரஹ்மான் மியானவி பேசினார். நாம்பாகிஸ்தானை இஸ்லாமிய ராஜ்யமாகவே பார்க்க விரும்புகிறோம். திரு குர்ஆன் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு இஸ்லாம் போதிக்கும் சட்ட திட்டங்களை பின்பற்றி ஆட்சியை அமைக்குமாறு நாம் பாகிஸ்தான் அரசாங்கத்தை கோருகிறோம். உண்மை முஸ்லிம்களாய் திரு குர்ஆனை பின்பற்றுவதிலேயே நம்முடைய விமோசனமும் முன்னேற்றமும் அடங்கியிருக்கிறது. எந்த இடத்திலும் எப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்திலும் நாம் உண்மையை அஞ்சாமல் வெளியிட்டு வந்திருப்பதற்கு அஹ்ரார்களின் சரித்திரமே சான்று. இன்றைக்கும் தயவு தாட்சண்யமின்றி பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு சிறந்த ஆலோசனை கூற துணிந்துள்ளோம். முஹம்மது நபி நாயகத்தை எதிர்ப்பவன் பாகிஸ்தான் விஸ்வாஸியாக இருக்க முடியாது. காதியானிகள் இஸ்லாமுக்கு புறம்பானவர்கள் என்பது நம் உறுதி. முஸ்லிம்களின் பெயரால் திருகுர்ஆனைக்காட்டி இஸ்லாமின் பெயரை உபயோகித்துக்கொண்டு முஸ்லிம்களின் உரிமைகளை ஆக்ரமிக்க அவர்களுக்கு எவ்வித உரிமையும் கிடையாது. பாகிஸ்தானில் ஹரிஜனங்கள், முஸ்லிமல்லாதார், கிருஸ்துவர்கள், பார்ஸிகள், மைனாரிடி சமூகத்தினராக இருப்பதைப் போலவே காதியானிகளையும் ஒரு மைனாரிடி சமூகமாக பாவிக்க வேண்டும். நபிமார்களின் வாசஸ்தலமான பாலஸ்தீனில் நபி அவர்களின் எதிரிகள் ஆதிக்கம் பெற்றிருக்கின்றனர். ஸர். சபருல்லாவைப் போன்ற ஒரு காதியானியை அரபு நாடுகளுக்கு அனுப்பி முஹம்மது நபியை தூஷிக்க சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருப்பது முஸ்லிம்களின் அறியாமையாகும் இம்மாதிரியான விஷயங்களில் முஸ்லிம்கள் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

("ஆஸாத்" தினசரி - லாஹூர்.)

— பாலஸ்தீனில் —

மாண்டேட் ஆட்சியின் முடிவும் சூழ்ச்சிகளும்

1919 ஏப்ரல் 28-ல் ஏற்பட்ட பிரிட்டிஷ் மாண்டேட் ஆட்சி 1948 மே 15-உடன் பாலஸ்தீனிலிருந்து வாபஸாகி அத்துடன் இருபத்தெட்டு வருஷங்களாக பாலஸ்தீனுக்குப் பிடித்திருந்த சனியனும் துலைந்துவிட்டது. ஆயிரக்கணக்கான வெள்ளைக் குடும்பங்களும் ஒரு லட்சம் வெள்ளை சோல்ஜர்களும், பாலஸ்தீனைவிட்டுக் கிளம்பி இங்கிலாந்துக்குச் சென்றுவிட்டனர். ஆகஸ்ட் முதல் தேதிக்குள் கடைசி வெள்ளை சோல்ஜரும் வெளியேறிவிடுவான் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புனித பூமியான பாலஸ்தீன் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட பிறகு அரபு பிரதேசம் முழுதும் பூரண சுதந்திரம் அடைந்துவிடும்.

பாலஸ்தீனில் பிரிட்டிஷ் ஆட்சியின் முடிவு இன்றைய இஸ்லாமிய சரித்திரத்தின் மஹத்தான சம்பவமாகும் பாலஸ்தீனை ஆக்ரமித்த லார்டு அல்லன்பியின் ஆத்மா இன்று வேதனையுற்றுத் தவிக்குமென்பது வாஸ்தவம்தான். ஆயினும் உலகத்தின் எழுபது கோடி முஸ்லிம்கள் இனி பாலஸ்தீனை பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்தும் யூத ஆக்ரமிப்பிலிருந்தும் விடுவித்துக்கொள்ள முடியும் என்று நிம்மதியடைந்திருக்கின்றனர்.

பாலஸ்தீனும் முஸ்லிம் உலகமும்

பாலஸ்தீன் இஸ்லாமிய ஆட்சியின் இரண்டாவது தலைநகரமாகும். புனிதமானதென்று திருகுர்ஆன் குறிப்பிடும் ஸ்தலமாகும் அதை முஸ்லிம் உலகமும் வருங்கால முஸ்லிம் சந்ததிகளும் இழக்க முடியாது. 10,420 சதுரமைல் விஸ்தீரணமுள்ள பாலஸ்தீன் சரித்திரக்தில் உமர்கத்தாப் அவர்கள் அடைந்த வெற்றியின் அழியாப்புகழ் இடம்பெற்றிருக்கின்றது பாலஸ்தீன், ஆயிரக்கணக்கான சஹாபாக்கள், சுல்தான் சலாஹுத்தீன் அய்யூபியின் வீரர்களுடைய ஆத்மாக்களின் தாயகமாக விளங்குகிறது. இன்றிலிருந்து பல ஆயிர வருஷங்களுக்கு முன்னிருந்து அரபியர்களின் தாயகமாக இருந்துவந்த பாலஸ்தீனம் கடந்த பதிமூன்று நூற்றாண்டுகளாக முஸ்லிம்களின் பரிபாலனத்தில் இருந்து வருகிறது. முப்பது வருஷங்களுக்கு முன் சரித்திர பூர்வமான பிதுரார்ஜ்ஜித உரிமை பறிக்கப்பட்டு முஸ்லிம்களின் உள்ளம் புண்படுத்தப்பட்டது. அரபியர்களை மோசம் செய்து, ஈராக், சிரியா, பாலஸ்தீனை ஆக்ரமித்து அதற்கு மாண்டேட் ஆட்சியென்று வெள்ளையர்கள் பெயரிட்டனர். மே-15 உடன் அந்த ஆட்சியும் முடிந்து பிரிட்டன் வாபஸாகிவிட்டது இனி பாலஸ்தீனத்தின் முடிவுபாலஸ்தீனத்திலேயே செய்யப்படும். சண்டையில் ஈடுபட்டிருக்கும் இருசாராருக்குமிடைபே சமாதானத்தின் வெள்ளைக்கொடி முடிவு செய்ய முடியாமல் போனால் யுத்தம் தீர்ப்பளிக்கும்.

ஒரு பக்கம் அமெரிக்க ஜனாதிபதி ட்ரூமனுக்கு யூதர்களின் ஐம்பது லட்சம் ஓட்டுகள் தேவை. இன்னொரு பக்கம் ரஷ்யாவும் தன்னுடைய புதிய ஆசைகளின் வலையை யூதர்கள் மீது வீசுகின்றது. யூதர்கள் உலக நாடுகளுக்கு லேவாதேவிக்காரர்களாக வேறு இருந்துவருகின்றனர். அவர்களுடைய கடன் பளுவால் கடமையைச்செய்ய முடியாத நிலைமையில் உலக நாடுகள் இருந்துவருகின்றன. யூத ஏஜென்சியின் சூழ்ச்சிகள், யூதர்களின் படை பலம், போர்திட்டங்கள், வல்லரசுகளின் ஆதரவு எல்லாம் ஒருபுறமிருந்தாலும், பாலஸ்தீனத்திலிருந்து பிரிட்டிஷார் வாபஸாய் விட்டதைக்குறித்து சந்தோஷிக்கத்தான் வேண்டும்.

முப்பது வருஷங்களுக்கு முன் பாலஸ்தீனத்தில் நுழையும்போது "இன்று பிறைக்கும், சிலுவைக்கும் நடந்துவந்த யுத்தம் முடிவடைந்தது." என்று பேசிய கர்னல் அல்லன்பி மட்டும் இன்று உயிருடன் இருந்திருந்தால், முப்பது வருஷங்களுக்குப்பிறகு தன்னால் ஏற்றி வைக்கப்பட்ட கொடியை சுருட்டிக்கொண்டு, பிரிட்டிஷ் ஆட்சி, பாலஸ்தீனிலிருந்து வெளியேறுவதையும், அரபியர்கள் தங்கள் நாட்டின் பரிபாலனத்தை ஏற்க முன்வந்திருப்பதையும் கண்கூடாகப் பார்த்திருப்பார்.

மே 15-ல் இஸ்ரவேல் ராஜ்யம் டெல் அவீவில் அமைந்துவிட்டது. அந்தரங்கமாய் இறக்குமதி செய்யப்பட்டதன் பலனாக இன்று யூதர்களின் எண்ணிக்கை பத்துலட்சத்திற்கு எட்டிவிட்டதெனறு நம்பகமாகத் தெரிய வருகிறது இன்று யூதர்களின் ஆள்பலம் அரபியர்களுக்கு சரிசமமாக இருக்கின்றது. யூதர்களுக்கு கட்டுப்பாடான ராணுவப் பயிற்சியும் அமெரிக்க நவீன யுத்த தளவாடங்களும் இருக்கின்றன. யூத ஹகானா படைகளுக்கு ஐரோப்பிய ராணுவ பயிற்சி பெற்ற ஆபீஸர்களின் சேவையும் கிடைத்து வருகிறது. இருப்பினும் அராபியர்களின் தாக்குதலை யூதர்களால் சமாளிக்கமுடியாது. நியாயம் அரபியர்களை ஆதரித்து நிற்பதே அதற்குக் காரணம்.

மக்கள் உள்ளங்களை ஆளாமல் அவசர சட்டங்களால் ஆளமுடியாது.

மத்திய ஐக்கிய முன்னேற்றக் கமிட்டி மெம்பர் ஜனாப் A. M. அல்லாபிச்சை B.A., B.L., பத்திரிகைகளுக்கு கீழ்வரும் அறிக்கை விடுத்துள்ளார்.

"கடந்த அறுபது வருஷங்களாக அந்நிய ஆட்சியை எதிர்த்து காங்கிரஸ் மஹாசபை போராடிவந்தது. காந்திஜி அதன் பிரதம கமாண்டராக இருந்தார். தன்னுடைய அஹிம்சா ஆயுதத்தால் இந்திய சுதந்திரத்தை வென்றார். மக்கள் அவரைப் பின்பற்றினர். ஒவ்வொரு காங்கிரஸ் வாதியும் சுயநலமற்ற வீரனுக மக்கள் உள்ளங்களில் இடம் பெற்றிருந்தான். காங்கிரஸ் கவுரவம் உயர்ந்திருந்தது. ஹிந்து, முஸ்லிம், பிரிட்டிஷ் ஆட்சிகளின் கீழ் இருந்து ஜீவனிழந்திருந்த ஒரு சமுதாயத்தை காந்திஜி உயிர்ப்பித்தார். தன்னுடைய மக்கள் பிறப்புரிமைகளைப் பெற்று தங்களுக்குரித்தான கவுரவத்தை அடையும்படி காந்திஜி செய்தார். காங்கிரஸை ஆதரித்த மக்களே இன்று காங்கிரஸ்காரர்களை சந்தேகத்துடன் நோக்குகின்றனர். ஏன்? காங்கிரஸ்காரர்களாகிய நாம் நம்முடைய சிறந்த பண்பாட்டை இழக்க ஆரம்பித்தோம். ஜனங்கள் நம்மை விட்டு தூர விலகுகின்றனர். காங்கிரஸ்காரர்கள் மக்களுடைய உள்ளங்களை ஆளமுடியாத நிலைமையில் அவசரச் சட்டங்களைக்கொண்டு மக்களை ஆளமுடியாது. அவசரச் சட்டங்கள் வரவேற்கத் தகுந்தவையல்ல. நம்மை நாம் பண்படுத்திக்கொள்வதே நாம் செய்யவேண்டிய சிறந்த காரியம். பிரிட்டிஷாரின் கட்டுப்பாடான பலாத்காரத்தை முறியடித்த நாம் பலாத்காரமென்று சொல்லப்படும் கம்யூனிஸ்ட் நடவடிக்கையைக்கண்டு ஏன் பயப்படவேண்டும்? நம்முடைய பலஹீனம் நம்முடைய அரசியல் எதிரிகளுக்கு சக்தியை கொடுத்து வருகிறது. அவசரச் சட்டங்களை வாபஸ் பெருவதன் மூலம் நிர்வாகத்திலும், சட்டசபைகளிலும் சம்மந்தப்பட்டவர்கள் அனைவரும் தங்களுடைய வேலைகளை நேர்மையுடன் செய்ய சந்தர்ப்பம் அளிக்கும்படி நமது சர்க்காரை வேண்டுகிறேன். காங்கிரஸ்காரர்கள் தவறினுல் நாடு சீர்குலைய நேரிடும். இன்னும் காங்கிரஸ்காரர்கள் இந்தியாவுக்கு எவ்வளவோ நன்மைகள் செய்ய முடியும்.

இச்சந்தர்ப்பத்தில் பாலஸ்தீன அரபியர்களுக்கு முஸ்லிம் உலகத்தின் உதவி அவசியம். பிரிட்டிஷார் வாபஸாய்விட்டபோதிலும் ஏகாதிபத்திய, அமெரிக்க முதலாளித்துவ நலன்கள் யூதர்களை ஆதரிக்கின்றன.

இருபத்தெட்டு வருஷங்களாக பிரிட்டிஷார் பாலஸ்தீனத்தில் யூதர்களை இறக்குமதி செய்து வந்திருக்கின்றனர். கடந்த யுத்தத்தின்போது யூதப்படைகளுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. இன்று பிரிட்டிஷ் ஆட்சி வாபஸானவுடன் பத்து லட்சம் ஆயுத பலம் கொண்ட யூதர்கள் பாலஸ்தீன் கரையோர கேந்திர ஸ்தானங்களை பிரிட்டன், அமெரிக்காவுக்கு ஜயித்துக்கொடுப்பதில் முனைந்திருக்கின்றன. நிரபராதிகள் என்று உலகத்தில் பறைசாற்றிக்கொண்டே ஏகாதிபத்திய, முதலாளித்துவ சூழ்ச்சிகள் தங்கள் வேலையில் ஈடுபட்டிருக்கின்றன.

"பாலஸ்தீனம் நம்முடைய போக்கு வரத்து அமைப்பில் கடல், ஆகாய கேந்திரஸ்தானமாகும். ஜிப்ரால்டரிலிருந்து சூயஸ் கால்வாய்வரை நம்முடைய ஆட்சியின் பாதுகாப்பு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பாதுகாக்க வேண்டுமானுல் பிரிட்டன் யூதர்களுக்கு பின்பலமாய் இருக்க வேண்டியதவசியம். யூதர்களை மெஜாரிடியாகக்கொண்ட ஒரு பாலஸ்தீனத்தை சிருஷ்டித்து அதில் யூதர்களுக்கு ஆதிக்கம் இருக்கும்படி செய்யவேண்டியது பிரிட்டிஷ் நலன்களுக்காக அவசியம்" என்று 1936-ல் மிஸ்டர் ஏமெரி பார்லிமெண்டில் பேசியதை மறந்துவிடுவதற்கில்லை.

இருபத்தைந்து வருஷங்களுக்கு முன் இங்கிலாந்து பத்திரிகைகளின் தந்தையான லார்ட் நாத்கிளிப் பாலஸ்தீனத்தைக்குறித்து கீழ்வருமாறு சொன்னதைஇன்று அரபியர்கள் உலக்குத்திருப்பிச் சொல்ல முடியும்.

'நம்முடைய சகாயத்தால் கொலைகார யூதர்களுக்கு வெற்றி கிடைத்துவிட்டால் உலகத்தின் பல்வேறு பாகங்களில் வசிக்கும் முஸ்லிம்கள் கொந்தளிப்படைந்து நம்மை வெறுக்க ஆரம்பித்துவிடுவர்"

பிரிட்டிஷ் ஆட்சி முடிவடைந்து முஸ்லிம் உலகத்துக்கும், யூத உலகத்துக்கும் பாலஸ்தீன் புனித பூமிக்காக போராட்டம் ஆரம்பமாய்விட்டது. இந்த போராட்டத்தில் தங்களுக்கு உதவி செய்பவர் யார்? தங்கள் லட்சியத்தை எதிர்ப்பவர்கள் எவர்? என்று முஸ்லிம்கள் பார்க்கப்போகின்றனர். பாலஸ்தீன் போராட்ட லட்சியத்தில் உதவி செய்பவர்களை முஸ்லிம்கள் உபகாரிகளாகக் கொள்ளுவார்கள். அவர்களுக்காக உயிரையும் அர்ப்பணிக்கத் தயாராய் இருப்பார்கள் என்பது நிச்சயம்.

நல்லவர் கெட்டவர் எங்குமுண்டு.

நல்லவர்கள், கெட்டவர்கள் எல்லா சமூகங்களிலும் இருக்கின்றனர். முஸ்லிம்களெல்லாம் நல்லவர்களல்ல. சீக்கியர்கள் அனைவரும் கெட்டவர்களல்ல. அதற்கு கீழ்வரும் இரண்டு சம்பவங்களே உதாரணம் அம்பாலா ஜில்லாவில் போடியா ஒரு சிறிய சமஸ்தானம். அதன் சமஸ்தானாதிபதி ஒரு இளம் சீக்கியர். கலவரங்கள் ஆரம்பித்தன. கிழக்கு பஞ்சாபின் இதர ஜில்லாக்களைப் போல் அம்பாலாவிலும் முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். இதைக்கண்ட போடியா சமஸ்தானாதிபதி முஸ்லிம்களை தன்னுடைய கோட்டைக்குள் அழைத்துக்கொண்டார். நான் உயிருடன் இருக்கும் வரை எவனும் ஒரு முஸ்லிமை ஏரெடுத்துப் பார்க்க முடியாது. என்று சபதம் செய்தார் பல ஆயிரக்கணக்கான முஸ்லிம் ஆண்கள், பெண்கள், குழந்தைகளுக்கு பாதுகாப்பு அளித்தது மட்டுமின்றி உணவு ரேஷனுக்கும் ஏற்பாடு செய்தார் இன்றைக்கும் ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் கோட்டைக்குள் பாதுகாப்புடன் இருந்து வருகின்றனர். பாகிஸ்தானுக்கு போக விருப்புகிறவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது. போக விரும்பாதவர்களுக்கு சாத்தியமான எல்லா வசதியும் அளிக்க உறுதி அளிக்கப்பட்டிருக்கிறது.

சர்தார் நிஹால்சிங் டில்லி கரோல்பாகைச்சேர்ந்தவர். மகாத்மாவின் கடைசி டில்லி விஜயத்தின்போது அடிக்கடி காந்திஜியை சந்தித்து வந்தவர். நாஸ்திகர். ஆயினும் ஒழுக்கமுள்ளவர். பொய்பேசாதவர். பொய் பேசாதவன் பாபம் செய்யமாட்டான் என்றும் சேவையை கடமையாகக் கொள்வான் என்றும், மஹாத்மா சொல்லக் கேட்டிருந்தார். கலவரங்களின் போது கரோல்பாக் முஸ்லிம்களின் கபரஸ்தானாக மாறிற்று. நிரபராதிகளான பெண்கள் குழந்தைகள் கொல்லப்பட்டனர். அண்டையில் வசித்து வந்த ஒரு ஹாஜி சாஹிப் குடும்பத்தைச் சேர்ந்த பன்னிரெண்டுபேரை நிஹால்சிங் தன் வீட்டில் மறைத்து வைத்தார். ஒருநாள் கழிந்தபிறகு நிஹால்சிங் வீட்டை ஹிந்து, சீக்கியர்கள் சந்தேகித்தனர். முன்னூறு பேர்கள் அடங்கிய ஒரு கூட்டம் நிஹால் சிங் வீட்டையடைந்து மறைத்து வைத்திருக்கும் முஸ்லிம்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு கேட்டது. அச்சமயம நிஹால் சிங்குக்கு ஒரு சோதனையாகவே இருந்தது. போய்யே சொல்லியறியாத நிஹால் சிங் உண்மையைச் சொன்னால் பன்னிரெண்டு பேர்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்தைக் குறித்து சிந்தித்தார். என்னுடைய வீட்டில் யாருமில்லை என்று பொய் சொன்னார். கூட்டத்திலிருந்த அனேகருக்கு நிஹால்சிங் பொய் பேசமாட்டாரென்று தெரியும் அவருடைய பேச்சை நம்பி கூட்டம் திரும்பிச் சென்றுவிட்டது மறுநாள் நிஹால் சிங் போலீஸ் ஸ்டேஷனுக்குச் சென்றார். அங்கு அதுவரை ஒரு முஸ்லிம் போலீஸ் அதிகாரி இருந்துவந்தான் வழியில் பிணங்கள் கிடந்தன. கொலை செயல்கள் பற்றிய செய்திகள் ஸ்டேஷனுக்கு வந்தவண்ணம் இருந்தன. போலீஸ் அதிகாரி மிஷின் கன் பாதுகாப்புடன் நிஹால்சிங் வீட்டிலிருந்த முஸ்லிம்களை பழைய கோட்டை அகதி முஹாமில் சேர்ப்பித்தான். முஸ்லிம்களைக் காப்பாற்றிய நிஹால் சிங்கை கொன்றுவிட முடிவு செய்தனர். பலநாள்வரை வெறியர்களுக்கு பயந்து நிஹால் சிங் போலீஸ் ஸ்டேஷனில் இருக்கவேண்டிவந்தது. அமைதி ஏற்பட்ட பிறகு ஹாஜி சாஹிப் தன்னுடைய சொத்துக்கள் அனைத்தையும் நிஹால் சிங் பேருக்கு எழுதிவிட்டு பாகிஸ்தான் சென்றுவிட்டார். இதுவரை அந்த சொத்து நிஹால் சிங்கிடம் அமானத்தாக இருந்துவருகிறது. அதில் ஒரு மசூதியும் இருக்கிறது.

காலிகளை அளவு கோலாகக்கொண்டு ஒரு சமூகத்தைப்பற்றி அளவு செய்வதைவிட அதிலுள்ள உத்தமர்களைக்கொண்டு அளந்து பார்த்தால் எல்லா சமூகங்களையும் கவுரவிக்கவேண்டிய அவசியத்தை உணரமுடியும்.

மேலப்பாளையம்

காலியாயிருக்கும் திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம் (ரிஸர்வ்) சட்டசபை ஸ்தானத்தின் இடைத் தேர்தலுக்கு 3—6—48 அன்று பகல் பன்னிரண்டு மணிக்கு காங்கிரஸ அபேட்சகராக ஆலிஜனாப் V. S. T. முகம்மது இப்ராஹிம் சாஹிப் ஜில்லா கலெக்டரிடம் நாமினேஷன் தாக்கல் செய்திருக்கிறார்.

M. K. காதர் மொய்தீன்,
காரியதரிசி,
நகர காங்கிரஸ் கமிட்டி, மேலப்பாளையம்.

V S T. முஹம்மது இப்ராஹிம் அவர்களை திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம்களுக்கு அறிமுகப் படுத்தவேண்டிய அவசியமில்லை. பழுத்த தேசபக்தர் பொதுஜன ஊழியர்; முஸ்லிம்களின் நண்பர்; ஹிந்துக்களின் தோழர் திருநெல்வேலி ஜில்லா ஹிந்து முஸ்லிம்களை இணைக்கும் பாலம் என்று அவரைக் குறிப்பிடுவது மிகையாகாது. இன்றைய வகுப்பு வேற்றுமைப் புயலில் அவரைப் போன்றவர்களால் மட்டுமே பிரிந்த உள்ளங்களை ஒன்று சேர்க்க முடியும். அவரைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்பதன் மூலம் தென்னாட்டு முஸ்லிம்களுக்கு சரியான வழிகாட்டக் கூடிய சந்தர்ப்பம் திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம்களுக்கு கிடைத்திருக்கிறது. திருநெல்வேலி ஜில்லா முஸ்லிம்கள் தங்கள் கடமையைச் செய்யத் தவறிவிடமாட்டார்கள் என்று நம்புகிறோம்.

முத்துப்பேட்டை.

தஞ்சாவூர் ஜில்லாவைச் சேர்ந்த முத்துப்பேட்டையில் ஏராளமான முஸ்லிம்கள் காங்கிரஸில் சேர முன்வந்துள்ளனர். காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இ க. முஹம்மது இஸ்மாயிலின் நெருங்கிய பந்துக்கள் உள்பட இதுவரை 250 முஸ்லிம்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களாக சேர்ந்திருக்கின்றனர். முத்துப்பேட்டையிலும் சுற்றுப்புறங்களிலு முள்ள ஏராளமான முஸ்லிம்கள் சேரத் தயாராய் இருந்துவருகின்றனர்.

31-5-48. E. K, முஹம்மது இஸ்மாயில்.

ஆங்கிலேயரின் சூழ்ச்சியும் — — திப்புவின் வீழ்ச்சியும்

—“அனந்தன்”—

ஒரு நாயைக் கொல்லவேண்டுமானால் “அதற்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது” என்ற வதந்தியைக் கிளப்பிவிட்டால் போதும். அதைக் கொல்வதற்கு வேண்டியசூழ்நிலை தானாகவே உண்டாகிவிடும். பிறகு கொல்வது எளிது. இதுதான் சர்ச்சிலின் சித்தாந்தம். நம் நாட்டில் வியாபாரத்திற்காக இடம் கேட்டு, பிறகு நம்மையே அடிமையாக்கி ஆண்டுகொண்டிருந்த ஆங்கிலேயர் கையாண்ட சித்தாந்தமும் இதுவே. இல்லையானால் ‘ஒண்டவந்த பிடாரி ஊர்ப் பிடாரியை ஓட்டுவது’ தான் எப்படி?

இன்றைக்கு சுமார் 150-வருடங்களுக்கு முன் அதாவது, 1799 மே 4-உ யன்று திப்பு சுல்தான் நான்காவது மைசூர் யுத்தத்தில், தன் உப்பைத்தின்று தனக்கே துரோகம் செய்த திவான் பூர்ணய்யா, மீர் காஸிம், மீர்சாதிக் முதலியவர்களுடைய துரோகச் செயல்களினால் கொல்லப்பட்ட விஷயம் சரித்திரத்தில் தெளிவாக எழுதப்படவில்லை. இதன் காரணம் இந்தியர்களுடைய சரித்திரம் ஆங்கிலேயரால் எழுதப்பட்டமையேயாகும். அன்றுமுதல் இங்கிலீஷ்காரர்கள் இந்தியாவின் எஜமானர்களாகவும், ஏக போக உரிமையாளர்களாகவும் ஆய்விட்டார்கள். இந்நிலை ஏற்பட்டமைக்குக் காரணம் ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூழ்ச்சி என்பது பிரசித்தம்.

சில திருஷ்டாந்தங்கள் பார்ப்போம்.

ஔரங்கசீப்பிற்கு பின் மொகலாய சாம்ராஜ்யம் சிதறுண்டது மத்தியில் பலமான அரசாங்கம் இல்லாததால் நாட்டில் அங்கங்கே சிறு சிறு ராஜ்யங்கள் தான்தோன்றியாய் முளைத்தன. இவைகளும் ஒன்றோடொன்று சண்டையிட்டுக் கொண்டதுடன் உள்நாட்டிலும் கலகங்கள் அடிக்கடி தோன்றி அமைதியான வாழ்வு எங்குமில்லை என்ற நிலை ஏற்பட்டது. இது அந்நியநாட்டவருக்கு இந்நாட்டில் வேரூன்றுவதற்குப் போதிய பக்குவமான சந்தர்ப்பத்தை யளித்தது. முகலாய சாம்ராஜ்யத்திற்குப்பின் தனி அரசு ஏற்படுத்திக்கொண்ட ஹைதராபாத் நிஜாமின் அரசுரிமைக்காக உள்நாட்டு கலகங்கள் தோன்றின. கர்நாடக நவாப்பின் சிம்மாசனத்திற்காக சந்தா சாகிபுக்கும் முகம்மதலிக்கும் சண்டைநடந்தது. இவ்விரண்டிலும் ‘கும்புனியார்கள்’ தலையிட்டு இரண்டு பூனைகளுக்கிடையில் அப்பத்தை பங்கிட்டுக் கொடுத்த குரங்கின் கதையாக முடித்தார்கள். வங்காளத்தில் சிராஜ்-உத்-தௌலா உமாசந்த் என்ற இருவர்களின் விரோதத்திற்கு தூபம் போட்டு, “எரிகின்ற வீட்டில் பிடுங்கினது ஆதாயம்” என்றபடி வேண்டிய அளவு தங்கள் பைகளை நிரப்பிக்கொண்டார்கள் ‘கும்புனியார்’.

இவ்விதம் சிறுகச் சிறுக தங்களுடைய ஆதிக்கமும் செல்வாக்கும் வலுவடைந்துவருவதைப் பார்த்ததும், இந்நாட்டையே கட்டி ஆளவேண்டு மென்ற துராசை பிடித்துவிட்டது. இதன் பயனாகத்தான் ‘ரெகுலேஷன் ஆக்ட்’ என்ற சட்டம் ஏற்பட்டது முதன் முதலில். பொதுவாகச் சொன்னால், இந்தியாவின் தலைவிதியை லண்டனில் நிர்ணயிக்க ஆரம்பித்த சட்டம் இதுவே. ருசிகண்டபூனை உறிக்கு உறி தாவுவது போன்ற, ஆங்கிலேயர் இந்நாட்டிலுள்ள பல சிற்றரசுக்கிடையில் வேற்றுமையும் பகைமையும் கிளப்பிவிட்டு, சிறியமீனைப் பெரியமீன் விழுங்க, அம்மீன் இவர்கள் தூண்டியில் சிக்கி ஜீரணமாயிற்று.

இப்படியாக 18-வது நூற்றுண்டின் இறுதியில் நாட்டில்மூன்றுவலிமைபெற்ற அரசாங்கங்களே நிலைத்தன. ஒன்று மராத்திய சாம்ராஜ்யம். இரண்டாவது ஹைதராபாத்நிஜாம் மூன்ருவது திப்புவின் “ஸல்த்தனத்-ஏ-குதாதாத” (கடவுளால் கொடுக்கப்பட்ட சாம்ராஜ்யம்.) திப்பு ஒருவனைத் தவிர, மற்ற இருவர்களாலும் ஆங்கில ஆதிக்கத்திற்கு யாதொருவிதமான இடையூறும் இல்லை. மராட்டியர்கள் சுத்த வீரர்களானாலும், தங்களுக்குள் ஒற்றுமையின்றிச் சீர்குலைந்து கொண்டுவந்தார்கள். ஹைதராபாத் நிஜாமோ, யார் எக்கேடு கெட்டாலும் தன் ராஜ்யத்தை விஸ்தரிக்க வேண்டும்; கட்டி ஆளவேண்டும் என்ற ஒரேநோக்கம கொண்டவர். ஆனால் திப்புசுல்தான் ஒருவன் தான் இந்நாட்டிலிருந்து அந்நியரை விரட்டிவிடுவது என்று கங்கணம் கட்டிக்கொண்டான் இதன் காரணம் வெளிப்படை. திப்பு இளமைமுதல் யுத்த வீரனாகவே பழக்கப்பட்டவன். ஆங்கிலேயருடன் பல யுத்தங்கள் புரிந்திருக்கிறான். ஆகையால், 6000-மைல்களுக்கப்பாலிருந்து வியாபார நிமித்தம் வந்த ஓர் சிறு கூட்டம், நாளடைவில் நாடு பிடிக்கும் கொள்ளைக்கூட்டமாக மாறிவிட்டதை உணர்ந்தான். இதற்காகத்தான் நாட்டில் சிதறுண்ட பல சக்திகளையும்

ஒன்றுசேர்ப்பதற்காகத் தூதுவர்களை அனுப்பினன். நேபாள அரசன், ரஜபுத்ர அரசர்கள், ஆப்கானிய மன்னன் முதலியவர்களுக்கெல்லாம் நாட்டில் ஆங்கிலேயரின் செல்வாக்கு அதிகரிப்பதையும், அதனால் விளையப்போகும் ஆபத்தையும் வலியுறுத்தினன் ஹைதராபாத் நிஜாமுடன் நீடித்த உறவு நிலவுவதற்காக, இருவம்சத்தாரிடையேயும் விவாஹம் நடத்திக்கொள்ளலாம் என்றும் யோசனை கூறினன். ஆனால் இவைகளெல்லாம் ஆங்கிலேயரின் சூழ்ச்சியினல் பயனற்றுப்போய்விட்டன. அப்படியும் திப்பு மனம் தளரவில்லை. பிரஞ்சுக்காரர்களைத் தன் சைன்யத்தில் சேர்த்துக்கொண்டான். அவர்களுடைய உதவியை நாடினன். திப்புவின் பலம் பெருகப் பெருக ஆங்கிலேயரின் உள்ளத்தில் அச்சம் குடிகொண்டது. அதற்கேற்ப ஐரோப்பாவிலும் யுத்தமேகம் சூழ ஆரம்பித்தது. இப்பொழுது இந்தியாவில் பிரஞ்சுக்காரர்களும், அவர்களுடைய உதவியை நாடியிருக்கும் திப்பு சுல்தானும் தான் ஆங்கில ஆதிக்கத்திற்கு இடையூறாக நிற்பவர்கள் என்ற நிலைமை ஏற்பட்டது.

ஒன்றன்பின் ஒன்ருக பின்கண்ட மூன்று சம்பவங்களால் நாம் மேலே குறித்த நிலை அடியோடு மாறி ஆங்கிலேயர்களுக்குச் சாதகமான நிலை ஏற்பட்டுவிட்டது.

1. ஐரோப்பாவில் பிரஞ்சு கப்பற்படை, நெல்சன் என்ற பிரிட்டிஷ் தளபதியிடம் நைல் நதிச் சண்டையில் படுதோல்வி யடைந்தது

2. இந்தியாவின்மேல் படையெடுத்த ஆப்கானியப் படையெடுப்பு தோல்வியடைந்தது.

3. திப்புவின் திவானுன பூர்ணய்யா, மீர்காஸிம், மீர்ஸாதிக் அலி ஆகியோர் ஆங்கிலேயருடைய சூழ்ச்சி வலையில் விழுந்து திப்புவுக்குத் துரோகம் செய்யவாரம்பித்தது.

ஆங்கிலேயருக்கும் பிரஞ்சுக்காரருக்கும் ஐரோப்பாவில் சண்டை நடந்தால் உலகெங்குமுள்ள ஆங்கிலேயனும் பிரஞ்சுக்காரனும் ஒருவனை ஒருவன் குத்திக் கொல்ல வாரம்பிப்பான். இது அவர்கள் மரபு. இவ்வியாதி நம்மைப் பிடித்ததாலோ என்னவோ பஞ்சாபில் ஓர் ஹிந்து கொல்லப்பட்டால் அது பீஹாரில் எதிரொலிக்கிறது! நிற்க பிரஞ்சுக் கடற்படை தோல்வியடைந்ததால் திப்புசுல்தானுக்கு உதவி கிடைப்பதற்கியலாமற் போயிற்று. ஆயினும் திப்புவின் வேண்டுகோளுக்கிணங்கி மாரிஷஸ் தீவின் பிரஞ்சு கவர்னர், இஷ்டப்பட்டவர்கள் திப்புவின் உதவிக்குப் போகலாம் என்று விளம்பரப் படுத்திவிட்டார். இவ்வுதவி திப்புவிற்குவந்து சேருமுன் திப்புவை ஒழித்துக் கட்டவேண்டிய தவசியமாயிற்று ஆங்கிலேயருக்கு. இதற்காக நாட்டிலுள்ள சக்திகளை யெல்லாம் திப்புவுக்கெதிராக 'ஆங்கிலக்கொடியின் கீழ்' ஒன்று சேர்க்கும் பொழுது மற்ருெரு ஆபத்து வந்துவிட்டது.

அதாவது ஆப்கானிய அரசனுன ஜமான்ஷாஹ் என்பவன் லாகூரின்மீது படையெடுத்துவிட்டான். இப்படையெடுப்பிற்கு திப்புவின் தூண்டுதலும் ஓர் காரணம் என்று சொல்லப்படுகிறது ஆனல் இதைக் குலைப்பதற்கு ஆங்கிலேயர் செய்த சூழ்ச்சி ஈரானிய சரித்திரத்தில் ஓர் ரஸமான சம்பவமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

அப்பொழுது இந்தியாவின் கவர்னர் ஜனரலாக இருந்தவன் லார்ட் வெல்லஸ்லி என்ற ஆங்கிலேயன். இந்தியாவில் பிரிட்டிஷ்சாம்ராஜ்யத்தை நிலைக்கவைத்த பெருமை இவனுக்கேஉரித்தாகும். இவன்கையாண்ட தந்திரங்கள் அனேகம்.

ஒருபுரம் ஆப்கானியப் படையெடுப்பினல் 'இந்தியாவிற்கே ஆபத்து வந்துவிட்டது' என்ற கூச்சலைக் கிளப்பி, நாட்டிலுள்ள பல்வேறு சக்திகளை யெல்லாம் ஆங்கிலக்கொடியின்கீழ் திரட்டினன். மற்ருெருபுரம் திரண்ட சக்திகளை இப் படையெடுப்பை முறியடிக்கும் பணியில் செலவிடாமல் திப்புசுல்தானுக்கெதிராக உபயோகிக்கும் பொருட்டு நிறுத்தி ஓர் சூழ்ச்சிசெய்து ஆப்கானிய படையெடுப்பை நிர்மூலமாக்கினன். வெல்லஸ்லியின் சூழ்ச்சியை நிறைவேற்றி வைக்க இந்தியாவில் ஓர் முஸல்மான் அகப்பட்டான். அப்பொழுது பம்பாய் கவர்னராக யிருந்த 'டங்கன்' என்பவன் 'மஹ்தீஅலிகான்' என்ற ஓர் முஸல்மானை சிபார்சு செய்தார். இவன் ஓர் ஷியா முஸ்லிம். திட்டப்படி இவன் பூஷஹர் (Bushair) சென்று ஈரானியப் பிரஜையாக மாறிக்கொண்டான். ஈரானிய பிரபுக்களிடத்தில் தன்செல்வாக்கை விருத்தி செய்து கொண்டான். இந்தியாவில் நடக்கும் 'ஷியா, ஸுன்னி' தகராறுகளை ஒன்றுக்கு பத்தாக கேட்போர் நம்பும்படி கதை கட்டிவிட்டான் இந்திய ஷியாக்கள் ஆப்கானியர்களுடைய துன்பந்தாங்காது ஆங்கிலேயரிடம் சரண்புகுந்து சுகவாழ்வு வாழ்ந்து வருகிருர்கள் என்ற பிரசாரத்தைச் செய்தான். ஜமான்ஷாஹின் படையெடுப்பினல் இந்திய ஷியாக்கள் படும் அவதியைப்பற்றி அங்கலாய்த்தான். ஆகையால் ஜமான்ஷாஹின் படையெடுப்பைக் குலைத்தாலொழிய "இஸ்லாத்திற்கே" ஆபத்து வந்துவிடும் என்று பறைசாற்றினன். ஈரானிய பிரபுக்கள் மனம்

சலித்தது. மஹதீ அலிகானும் இச்சமயத்தில் பணத்தை வாரி இறைத்தான். காற்று மாறி வீச ஆரம்பித்தது.

ஜமான்ஷாஹின் சகோதரன் மகமூத்கான் என்பவன். இருவருக்கும் நெடுநாளையப்பகை. மஹதீ அலிகானின் தூண்டுதலின்பேரில் ஈரானியப்பிரபுக்கள் தங்கள் அரசனிடம் இந்தியாவிலுள்ள ஷியாக்களை காப்பாற்றும் பொருட்டு ஜமான்ஷாஹிற்கு எதிராக இந்த மகமூத்கானுக்கு உதவி செய்யும்படி வற்புறுத்தினர்கள். சூழ்ச்சி பலித்தது.

ஈரானிய அரசனுடைய உதவியின்பேரில் மகமூத்கான் 'ஹிராத்' (Hirat) மேல் படையெடுத்துவிட்டான். அப்பொழுதுதான் லாகூரின் தலைவாயிலை அடைந்த ஜமான்ஷாஹிற்கு சமாசாரம் எட்டிற்று. ஓடோடியும் திரும்பிவந்தான். இருவருக்கும் நடந்த முதற்சண்டையிலேயே ஜமான்ஷாஹ் தோல்வியடைந்தான். அவனது கண்கள் பறிக்கப்பட்டு, அநாதியாக லூதியானுச் சிறையில் கிடந்து உயிரைவிட்டான் இது 1799 ஜனவரியில் நடந்தது. இப்படியாக ஆப்கானியப் படையெடுப்பும் சீர் குலைந்தது. திப்புசுல்தானின்திட்டங்கள் தவிடுபொடியாயின. ஆங்கிலேயரின் கை மேலோங்கிற்று. இந்தப் புனிதமான கைங்கரியத்தை ஆங்கிலேயரின் கையாளாகயிருந்து நடத்திவைத்த துரோகி மஹதீ அலிகானுக்கு இரண்டு லட்சத்து இரண்டாயிரம் ரூபாய்கள் கொடுக்கும்படி சிபார்சு செய்தார் லார்ட் வெல்லஸ்லி! துரோகத்திற்குப் பரிசு!

இவ்வளவிருந்தும் ஆங்கிலேயர் திப்புசுல்தானைப் போருக்கழைப்பதற்குப் போதிய தர்மநியாயம் இல்லை வீணாகச் சண்டைக்கிழுத்த பழி தம் தலையில் விழும் என்பது நிச்சயமாய்த் தெரியும். வெல்லஸ்லிக்கு ஆங்கிலேயருக்கெதிராகச் சதிசெய்ததாகக் குற்றஞ்சாட்டுவதற்குப் போதிய காரணங்களும் இல்லை. மேலும் 'ஒரே கல்லில் இரண்டு பட்சி' யை வீழ்த்துவது போன்று, சுல்தானை அழிப்பதும் மற்ற அரசர்கள் தம் கொடியின்கீழ் ஒன்றுசேர்வதும், ஏக காலத்தில் நடந்தேறினால், இந்திய நாட்டிற்குத் தாமே தனித்த ராஜாவாக ஆகிவிடலாம் என்றும் திட்டம் போட்டான் வெல்லஸ்லி. இதற்காக 'சப்சிடியரி சிஸ்டம்' என்ற ஓர் திட்டம் தயாரித்தான். இத்திட்டம் இந்தியாவில் சமாதானம் நிலவும் பொருட்டுப் போடப்பட்டது. இதன்படி ஓர் சைன்யம் எழுப்பப்பட்டது. அதில் ஆங்கிலேயரைத் தவிர, பிற நாட்டு மக்கள் இடம்பெறவில்லை. இதில் கையொப்பமிட்டவர்கள் இதன் நிர்வாகச் செலவையும் தங்கள் பங்கில் கொடுக்க ஒப்புக்கொண்டார்கள். மேலும் தங்கள் தங்கள் அரசாட்சியிலுள்ள வேற்று நாட்டவரை (வேறு யார்? பிரஞ்சுக்காரர்கள் தான்) வெளியேற்றிவிட வேண்டும் என்பதும் இத்திட்டத்தின் ஓர் ஷரத்து. ஓர் ஆங்கில ஏஜண்டையும் தங்கள் ராஜ்யத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். கடைசியாக சைன்யம் ஆங்கிலேயருடைய தலைமையின்கீழ் தான் வேலைசெய்யும்.

இந்தத் திட்டத்தை சுதந்திர உணர்ச்சியுள்ள எந்த அரசாங்கமும் ஏற்றுக்கொள்ளுமா? ஆயினும் இதில்முதல் கையெழுத்திட்டவர் ஹைதராபாத்நிஜாம். மறுநாளே பிரிட்டிஷ் ஏஜெண்டின் மேற்பார்வையில், அங்கிருந்த பிரஞ்சுக்கொடி இங்கிலாந்து 'பொருட்காட்சி சாலைக்கு' அனுப்பப்பட்டது.

திப்பு சுல்தானுக்கும் இத்திட்டத்தை ஏற்கும்படி அழைப்பு விடப்பட்டிருந்தது சுல்தான் இதைக் கண்ணால்கூட பார்க்க மறுத்துவிட்டார். இதனாலும் வெல்லஸ்லியின் மனம் புழுங்கிற்று.

'பிரஞ்சுக்காரர்களை இந்நாட்டிலிருந்து விரட்டிவிட்டால் பிறகு தாங்களே இந்திய மண்ணிற்கு ஏக போக உரிமை கொண்டாடலாம்' என்ற ஆங்கிலேயரின் துர் எண்ணத்தை உணர்ந்தவனாகையால் திப்பு சுல்தானிடம் ஆங்லேயருடைய நயங்களும் பயங்களும் பயனற்றுப்போயின. ஆங்கிலேயர் தனித்து திப்புவை எதிர்த்து வெற்றிபெற முடியாது என்பது தெளிவு. தன் ராஜ்யம் நிலைத்தாற்போதும் என்ற எண்ணம் கொண்டவனாயிருந்தால், ஹைதராபாத் நிஜாமைப்போன்று, மைசூர் நவாபாக இன்றுவரை விளங்கியிருக்க முடியும். ஆனால் திப்பு எதற்கும் மசிந்தவனாகக் காணோம்.

சுல்தானின் ராஜ்யம் ஓர் சுதந்திர நாடாக இருந்ததால், பிரஞ்சுக்காரர்களைத் தன்னிடமிருந்து விரட்டாததும், சப்சிடியரி சிஸ்டத்தில் கையெழுத்திடாததும், பெரிய குற்றமாகிவிடாது. ஆகையால் தான் பிரசார ஆயுதத்தை ஏவி, திப்பு, ஹிந்துக்களின் விரோதி என்றும், பலவந்தமாக மதம் மாற்றுகிறான் என்றும், ஜனங்களை இம்சிக்கும் கொடியவன் என்றும் பறை சாற்றினார்கள். இதன் மூலம் வெறுப்புணர்ச்சி பரவி; அரசாங்கத்திற்கு விரோதமாக ஜனங்களைத்தூண்டினால்தான் யுத்தத்திற்கு வேண்டிய சூழ் நிலை ஏற்பட்டு விடும் என்று நம்பினார்கள். ஆனால் இந்தப்பழியில் ஒன்று கூட உண்மையில்லை. தங்கள் நாய்களைக்கூட 'திப்பு' என்றே பெயரிட்டுக் கூப்பிட்டார்கள் என்றால் ஆங்கிலேயருக்கிருந்த வெறுப்பும் பகையும் எத்தன்மையது என்பதை ஊகித்துக்கொள்ளலாம்.

திப்புவின் அரசாங்கம் வலிமை பெற்றதின் காரணம், அவன் ஹிந்துக்களேயும் முஸ்லிம்களேயும் சம நோக்குடன்பார்த்தமைதான். ஸ்ரீரங்கப்பட்டணத்தில் சுல்தானின் மாளிகையைச்சுற்றிலும் ஸ்ரீ ரெங்கநாதர் ஆலயம், ஸ்ரீ வெங்கடரமண சுவாமியின் ஆலயங்கள் இன்னும் பரிபூரண சோபையுடன் விளங்குகின்றன. ஓர் ஹிந்து அவன் ராஜ்யத்தின் திவானுக இருந்தான். தஞ்சை, திருச்சி, திண்டுக்கல், மைசூர் முதலிய ஆலயங்களுக்கு மான்யங்கள் வழங்கியிருக்கிறுன். ஜகத்குரு சங்கராசாரியாரான ஸ்ரீசச்சிதானந்த பாரதி அவர்கட்கு, கன்னடத்தில் எழுதியிருக்கும் கடிதங்கள் இன்னும் சமஸ்தானத்தில் இருக்கின்றன. ஒன்றில் 'பெரியார்களுடைய வருகையால் நல்ல மழையும், தானிய செழுமையும், அமைதியும், நிலவுமாகையால், தாங்கள் தயவு செய்து மறுபடியும் ஸ்ரீ நகருக்கே (சிருங்கேரி) வரவேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்றெழுதியவனையா ஹிந்து விரோதி என்ருர்கள்? தன் மக்களுடைய க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாயிருந்தமையால் ராஜ்யம் வலிவுபெற்றது. அவ்வளவுக்கவ்வளவு ஆங்கிலேயருக்குத் திப்புவை அழிப்பது துர்லபமாயிற்று.

நாம் மேலே கூறியபடி திப்புவின்பேரில் துவேஷப்பிரசாரம் ஆரம்பமாயிற்று. அதன் பலனுகத்தான் இன்றும் தமிழ்நாட்டில் 'திப்பு என்ருல் அழும்குழவி வாய்மூடும்.' என்ற அவச்சொல் வழங்குகிறது

ஓர் ஆங்கிலேயன் மதம் மாறி முஸல்மானுக ஆய்விட்டான். இவன் 'பீர்' வேஷம்பூண்டு திப்புவின் நாட்டில் நுழைந்தான். மக்களிடையே துவேஷத்தைப் பரப்பினுன். பின்னல் நிகழப்போகும் சண்டைக்கு இப்பொழுதிருந்தே விரோதிகளை விலேக்கு வாங்க ஆரம்பித்தான். பணத்தை வாரி இரைத்தான் எத்தனேயோ பேர்கள் வலேயில் அகப்பட்டார்கள்.

திப்பு சுல்தானல் சிறைபிடிக்கப்பட்ட சில ஆங்கிலேயர் ஏற்கனவே சிறையினின்றும் விடுதலே பெரும் பொருட்டு இஸ்லாத்திற்கு மாறியிருந்தனர். சுல்தான் அவர்களுடைய குற்றத்தை மன்னித்து நல்ல பதவியிலும் அமர்த்தியிருந்தார் அவர்களும் இந்த 'வேஷதாரி' யின் சொற்படி உள்ளிருந்தே உளவு சொல்லவாரம்பித்தனர் கடைசியாய் திவான் பூரணய்யா, மீர்காசிம், மீர்சாதிக்அலி முதலியவர்களும் கூட இந்த வேஷதாரியின் வலேயில் சிக்கி, சுல்தானுக்கெதிராகத் துரோகச்செயல்கள் செய்ய ஆரம்பித்தனர். திப்பு சுல்தான் மூச்சு விட்டால்' அச்செய்தி இந்த துரோகிகளின் மூலமாக, பம்பாய், கல்கத்தா, மதராஸ் முதலிய இடங்களுக்கெல்லாம் மறுகணம் எட்டும். நிலமை இவ்வளவுதூரம் மாறிவிட்டது.

பாவம்! இவற்றையெல்லாம் அறிந்தவனல்ல. சற்றேனும் சந்தேகம் ஏற்பட்டிருக்குமானல், தன் தகப்பனர் "மாணத்திற்குப் பின், பூர்ணய்யா, மீர்காசிம், மீர்குலாம், இவர்களைக் கொன்றுவிடு மகா வஞ்சகர்கள்" என்று எழுதியபடியே செய்துமுடித்திருப்பானல்லவா? கொடியவனுக இருந்திருந்தாலும் இவர்களேக் கொல்வதற்கு இக்கடிதமே போதுமானதாயிருந்திருக்கும். ஆனல் திப்பு, அராக்கிருதமாக வேருெருவனுடைய வயலில் புகுந்து தானியத்தையபகரித்த, தன்மகனைக்கூட தண்டித்த, நியாயவாதியல்லவா? எதையும் தான் குற்றமென்று மனச்சாட்சிப்படி உணராதவரை தண்டிப்பதில்லே. பிறர் தூண்டுதலால் எக்காரியமும் செய்வதில்லே. மேலும் கடவுளிடம் அபார பக்திகொண்டவன். இந்த நேர்மையான குணங்கள் தான் அவனுடைய அழிவிற்கும் இந்தியா அடிமைப்படுவதற்கும் காரணமாயிருந்தன.

வெல்லஸ்லி, கலிபாவிடமிருந்தும் சுல்தானுக்கு ஓர் சிபார்சுக் கடிதம் வரவழைத்தான், பிரஞ்சுக்காரர்களை தன்னிடமிருந்து விரட்டும்படி. திப்பு அதையும் மதித்தானில்லே. பிறகு இவனே இஸ்லாத்தின் விரோதி என்று உலகோர்முன்பறை சாற்றினுர்கள்.

எல்லா ஏற்பாடுகளும் பூர்த்தி ஆனபிறகு திடீரென திப்பு சுல்தானின்பேரில் 1799-ன் ஆரம்பத்தில் போர் துடங்கிவிட்டான் வெல்லஸ்லி. இதுவே நான்காவது மைசூர் யுத்தம் எனப்படும். இதன்மூலம் ஆங்கிலேயர்கள் இந்தியாவைப் பூராவாக அடிமை கொண்டார்கள். இந்த யுத்தம் பெரிய சைன்யங்களின் வீரதீர பிரதாபங்களே விளக்கிக்காட்டுவதாயில்லே சண்டையென்ற பெயரால் துரோகிகள் அட்டகாசம் நிரம்பியது. மூன்று மைசூர் யுத்தங்களும் ஆங்கிலேயருடைய சூழ்ச்சிகளும் அதுவரை செய்ய முடியாத காரியத்தை துரோகிகள் நொடியில் செய்து முடித்தார்கள்.

சுமார் 37-ஆயிரம் துருப்புகள், காலாட்படை, பீரங்கி முதலியவைகளின் உதவியைக்கொண்டு தாக்கின. நிஜாமின் துருப்புகளும் ஆங்கிலேயரின் பக்கமிருந்தன: ஜெனரல் ஹாரிஸ் என்பவன் சேனைத் தலேவன். மலபார், மதராஸ், பம்பாய், நிஜாம்இந் நான்கு பக்கங்களிலிருந்தும் ஸ்ரீரங்கப்பட்டணத்தை நோக்கிப் புறப்பட்டன. இந்த சமாசாரம் கேட்டவுடன் திப்பு சிறு சைன்யத்துடன் ஜனரல் ஸ்டுவேர்ட் தலைமையில் வந்த பம்பாய் துருப்புகளே எதிர்த்தான். ஆனல் மறுபுறமிருந்தும் சத்ருக்கள் ஸ்ரீரங்கப்பட்டணத்தை நோக்கி வந்துவிட்டார்கள் என்று தெரிந்தவுடனேயே வாபசாகித் திரும்பினுன். இதன் பயனைய் ஆங்கிலேயர்கள் முன்னேறிக்கொண்டே வந்தார்கள்

திவான் பூர்ணய்யாவும் மீர்முயினுத்தீனும், சுல்தானின் நம்பிக்கைகுப் பாத்திரமான துருப்புகளையெல்லாம் ஆங்கிலேயரின் பீரங்கிகளுக்கு பலியிட்டுக் கொண்டே வந்தார்கள். கடைசியில் ஸ்ரீரங்கப் பட்டணத்தை எதிரிகள் நான்கு புறங்களிலும் வளைத்துக் கொண்டார்கள். இப்பொழுதுதான் திப்பு தனக்கு நேர்ந்திருக்கும் ஆபத்தை அறிந்தான். தன் உத்தியோகஸ்தர்களின் மூலமாக அங்கங்கே கடுமையான உத்தரவுகள் பிறப்பித்திருந்தான் எதிரிகளுக்கு சாப்பாட்டிற்கு வேண்டிய பொருள்கள் ஒன்றும் கிடைக்க முடியாதபடிச் செய்ய வேண்டுமென்று. ஆனால் துரோகிகளின்வேலை இதையெல்லாம் முன்பே சீர்படுத்திவிட்டது. நாம் முன்னே குறிப்பிட்ட முஸ்லிம் பீரின் நடவடிக்கைகள் மேலும் ஜரூராயின. மீர் ஸாதிக், பூர்ணய்யா இவர்களின் உளவு கொண்டு கோட்டைக்குள் நடக்கும் சகல ஏற்பாடுகளும் ஆங்கிலேயருடைய கூடாரங்களுக்கு எட்டிற்று. இது மட்டுமா? துரோகிகள் கோட்டையின் ஒருபுரத்துச் சுவற்றை வெடிவைத்தே துளைத்து விட்டார்கள்.

இந்த ஆபத்தான நிலைமையைப்பற்றி யோசிப்பதற்காகவே சுல்தான் முக்கியஸ்தர்களைக் கூப்பிட்டான் நிலைமையை விளக்கினான் அப்பொழுது சில பிரஞ்சுக்காரர்கள் சுல்தானுக்குச் சொன்ன யோசனை மிகவும் சிலாகிக்கத்தக்கது.

"ஹுசூர்: நாங்கள் உங்களுடைய வியர்வை சிந்துமிடத்தில் எங்கள் ரத்தத்தைச் சிந்தச் சித்தமாயிருக்கிறோம் எங்களுடைய யோசனைஉங்களுக்குப் பிடித்ததானால் இதோ சொல்லுகிறோம். விலை உயர்ந்த வஸ்துக்களை எடுத்துக்கொண்டு அந்தப்புரத்தார்களை அழைத்துக்கொண்டு பொருக்கி எடுத்த சைன்யத்துடன் தாங்கள் இரவோடிரவாக சிதல்துர்க்கத்திற்குப் போய்விடுங்கள் நாங்கள் எங்கள் உயிருள்ள வரை போராடி கோட்டையைக் காப்பாற்றுவோம். என்று உறுதி கூறுகிறோம். இது உங்களுக்குப் பிடித்தமில்லாவிட்டால் நாங்கள் பிரஞ்சுக்காரர்களையெல்லாம் திரட்டி ஆங்கிலேயர் வசம் ஒப்படைத்துவிடுகிறோம். சண்டையின் மூல காரணம் தொலையும். அமைதியாவது நிலவும்."

இந்தச் சொற்கள் சுல்தானுடைய நெஞ்சைப் பிளந்திருக்க வேண்டும். "என்னுடைய ராஜ்யமே அழிந்துபோனாலும் இவ்வளவு நன்றியுள்ள சிநேகிதர்களை விட்டுவிட்டு நான் எங்கும் செல்லவே மாட்டேன்." என்று ஒரே பிடிவாதமாகக் கூறிவிட்டான் திப்பு

பூர்ணய்யாவும், மீர்சாதிக் அலியும் சுல்தானிடம் "பிரஞ்சுக்காரர்களை கோட்டையைவிட்டு வெளியில் போய்விடாதீர்கள்" என்று யோசனை சொன்னார்கள். "இந்தத் துரோகிகள் என்னை உயிரோடுதப்பவிடக் கூடாதென நினைக்கிறார்கள் போலும்" என்று மனத்தில் நினைத்துக்கொண்டான் திப்பு. பிறகு ராஜி பேசுவதற்காக ஆங்கிலேயரிடம் ஆள் அனுப்பினான். ஆனால் ராஜியின் ஷரத்துக்கள் மிகக்கடுமையாயிருந்தன. இனி போர் செய்வதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலைமை ஏற்பட்ட பிறகு போருக்கான ஆயத்தங்கள் செய்தான்.

இப்பொழுதுதான் துரோகிகளின் வேலை உச்ச நிலையை அடைந்தது. ஆங்கிலேயர்கள் கோட்டைக்குள்ளேயே வந்து உளவுபார்த்துச் செல்லும்படியான நிலைமையும் வந்துவிட்டது மேலும் 1799 மே 2-ம் தேதியன்று லெப்டினன்ட் கர்னல் ஹில் என்பவனும் லாரன்ஸ் என்பவனும் அகழியைத்தாண்டி கோட்டைக்குள்ளேயே வந்து உளவுபார்த்துச் செல்லும்படியான நிலையும் கூட ஏற்பட்டது. அகழியில் நடந்துசெல்லுமளவு தண்ணீர்தான் விடப்பட்டிருந்ததென்றால் துரோகம் எவ்வளவு பகிரங்கமாய் நடந்தது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

1799 மேமீ 4உ காலை. துரோகிகள் ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த புனித நாள், சுல்தான் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கோட்டையைச் சுற்றி வந்து சரிபார்த்தான். சுமார் பத்து மணி சமயம் ஜனங்கள் சுல்தானிடம் எதிரிகளின் அட்டகாசத்தை முறையிட்டார்கள். சுல்தான் பக்கிரிகளுக்கும் மற்றவர்களுக்கும் தானம் வழங்கிவிட்டு அலங்கரிக்கப்பட்ட யானையின்மீது ஏறிக்கொண்டு கோட்டையின் வடபுரத்து மதிலைப் பழுதுபார்க்கச் சென்றான். மத்தியானம் வரை பழுது பார்ப்பதைக் கவனித்துக்கொண்டிருந்தான். சற்றுக் களைப்பாறுவதற்காக ஓர் மரத்தடியில் தங்கினான். இவ்விடமே தன் ஆகாரங்களைக் கொண்டுவரச்செய்து சாப்பிட ஆரம்பித்தான். ஓரிரு கவளங்கள் உட்சென்றிருக்குமோ என்னமோ, பெரும் அழுகைக்குரலும் கூச்சலும் கேட்டது. சுல்தானுடைய சில ஆட்கள் ஓடிவந்து சையத்கப்பார் ரணகளத்தில் உயிர்துறந்த செய்தியை மிக வருத்தத்துடன் முறையிட்டார்கள். இச்செய்தி திப்புவின் உள்ளத்தில் அம்புபோன்று தைத்தது. கோட்டைக்குள் சுல்தானுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவனும். துரோக வலையில் விழாதவனும், விரோதிகள் கண்டுப்பயப்படத்தக்கவனுமான ஒரு சைன்யத் தலைவன இவன். இவனுடைய மரணச் செய்தி ஒருபுரம் மனவேதனையைக் கிளப்பியதுடன் சுல்தானுடைய வீரத்தையும் கிளப்பிவிட்டது. வாயில் போடவிருந்த கவளத்தை எறிந்துவிட்டு வாளை ஒரு கையில் உருவிப்பிடித்து யுத்தகளத்தை நோக்கிப்

புறப்பட்டான் திப்பு குதிரையின்மேல். சண்டை வெகு மும்மரமாக நடந்தது. விரோதிகளுடைய பலம் சோதனைக்குள்ளாயிற்று. சுல்தானைப் பார்த்த வீரர்கள் உயிரை லட்சியம் செய்யாமல் போராடினர். ஸ்ரீரங்கப்பட்டணம் நிமிர்ந்து நின்று எதிர்த்தது ஆங்கிலேயர்களுடைய பலம்சிதறவாரம்பித்தது. வெற்றியென்பது வெகு தூரத்திற்கப்பால் போய்விட்டது

இந்த சமயத்தில் பூர்ணய்யா ஓர் அற்புதமான நாடகம் நடித்தான். வீரர்கள் தங்கள் இடம் விட்டு நகராது சண்டையில் மும்முறமாக ஈடுபட்டிருக்கும் இச்சமயத்தில் பூர்ணய்யா, சுல்தானுடைய முகர் வைத்த ஓர் சுற்றறிக்கையை வீரர்களுக்கு அனுப்பினான். "சிப்பாய்கள் தங்களுடைய சம்பளங்களை உடனே வந்து பெற்றுப்போகவும்." என்பதுதான் அது. சிப்பாய்களுக்கு கீழ்ப்படிதல் ஒன்றைத்தவிர, காரணம் கேட்கும் உரிமையும்,உசிதா உசிதம் யோசிக்கும் சந்தர்ப்பமும் ஏது? வழக்கமாகச் சம்பளம் பெறும் பெரிய மசூதிக்குச் சென்றார்கள்.

இங்கு இந்த நாடகத்தை நடத்திவிட்டு அங்கே ஆங்கிலேயர்களுக்கு "வெள்ளைக் கொடி" காட்டி சைகை செய்தார்கள். "தடங்கல்கள் விலக்கப்பட்டு விட்டன உடனே முன்னேறுங்கள்." என்பது தான் அதன் தாத்பர்யம். இச்செய்தி கிடைத்ததும் ஆங்கில சேனைத்தலைவனான ஜனரல் பீயர்டு தன் சைன்யத்துடன் அகழியையும் நதியையும் கடந்து கோட்டைச்சுவர்களின்பக்கம் வந்துவிட்டான். இவர்களுக்கு வழிகாட்டியாக துரோகியான மீர்காசிம் அலி என்பவன் முதன் முதலில் சுவற்றின்மேல் ஏறினான். இதையறியாதவனான திப்பு பின்புற வாசல் வழியாக சில வீரர்களுடன் கோட்டைக்கு வெளியில் பிரதானச் சண்டை நடக்கும் இடத்திற்குச் சென்றான். இதற்குள் கோட்டை மதில்களின்மேல் சத்துருக்களின் ஆதிக்கம் ஏற்பட்டு கோட்டைக்குள்ளும் நுழைய ஆரம்பித்துவிட்டார்கள் உடனே சுல்தான் இந்தப் புதுப்படையைச் சமாளிப்பதற்காக மறுபடியும் கோட்டையுள் புக எண்ணினான். ஆனால் என்ன ஆச்சரியம்! சற்று முன் திறந்திருந்த கதவு இப்பொழுது மூடிக்கிடந்தது இந்த வேலையைச் செய்தவன் மீர்சாதிக் என்பவன். சுல்தானுக்கு இந் நிலையில் என்ன செய்வதென்பது தெரியவில்லை இதற்குள் ஒருவன் "தாங்கள் சரண் அடைந்து விடுங்கள்" என்ற யோசனையை சுல்தானுக்களித்தான். திப்பு காறி உமிழ்ந்து "சீ! நரிபோன்று நூறு வருட வாழ்வை விட, சிங்கம் போன்று ஒருநாள் வாழ்க்கையே மேல்" என்று சொல்லிவிட்டு மேலே சென்றான். சண்டை வலுத்தது. ஒரு குண்டு திப்புவின் குதிரையைக் கீழே தள்ளியது. கீழே நின்றுகொண்டு சுல்தான் சண்டைசெய்தான். திப்புவைக் காப்பாற்றும்பொருட்டு வீரர்கள் தங்கள் உயிரையும் லட்சியம் செய்யாமல் போராடினார்கள். ஒவ்வொருவராய் வீரசொர்க்கம் அடைந்தார்கள். இவ்விடம்தான் விரோதிகளின் பலமும் அதிகமாயிருந்தது. ஒரு குண்டு திப்புவின் மார்பின் பக்கத்தில் பாய்ந்தது. பிரக்ஞை தவறி கீழே சாய்ந்தான், ரத்த வெள்ளத்தில் தோய்ந்துகொண்டிருந்தது அவனுடப்பு. இச்சமயம் ஓர் வெள்ளையன் அவ்வழி சென்றான். சுல்தானுடைய விலையுயர்ந்த ஆடைகள் அவன் மனத்தில் சபலத்தை யூட்டின, மெதுவாக திப்புவின் பக்கம் சென்று அவன் அணிந்திருந்த 'பெல்ட்' ஐயும், வாளையும் அபகரிப்பதற்காக குனிந்தான். அப்போதே சற்று மூர்ச்சை தெளிந்த சுல்தான். தன் வாளையுயர்த்தி அந்த வெள்ளையன் காலில் போட்டான் வெள்ளையனின் கால் படுகாயமுற்றது. இதனால் அவமானமடைந்த அந்த வெள்ளையன்தனது துப்பாக்கியால் சுல்தானை நோக்கிச்சுட்டுவிட்டான்.

மாலைவேளையில் சூரியன் மலைவாயிலில் செங்குழம்பில் புரண்டுகொண்டிருந்த சமயத்தில் சுல்தானின் உடல் கோட்டை மதில் ஓரமாகச் செங்குருதியில் புரள, ஆவி வீர சுவர்க்கம் அடைந்தது.

மறுநாள் திப்புவின் புதல்வர்கள், தலையில்தொப்பியின்றி முன் செல்ல, பினனல் திப்புவின் பிணம் ஊர்வலமாகச் சென்றது. ஊரிலுள்ள ஆடவர், பெண்டிர், ஹிந்து முஸ்லிம் எல்லோருமாக ஊர்வலத்தின் முன் விழுந்து கதறினார்கள் இயற்கையன்னையும் தன்னுடைய உணர்ச்சி தாங்கமாட்டாது, காவேரியில் வெள்ளமாய்ப் பெருக்கெடுத்தாள் எங்கிருந்தோ மேகங்கள் ஒரே இடியும் மின்னலுமாகப் பிரளயமாடின, ஊருக்கு வெளியில் வெள்ளையர்கள் தங்கியிருந்த ஓர் கூடாரத்தின்மேல் இடி விழுந்தது. பலர் மாண்டனர்.

இதன் பிறகு ஆங்கிலேயர் திப்புவின் பிள்ளைகளுக்கு ராஜ்யத்தில் பாதியை அளித்து தங்களின் கீழ் ஓர் சிற்றரசராக இருக்க ஏற்பாடுசெய்ய ஆசை கொண்டார்கள். அப்பொழுது நிஜாம் என்ன சொன்னார் தெரியுமா? "பாம்பைக்கொன்றுவிட்டு அதன் குட்டிகளை அப்படியே சும்மா விட்டுவிடுவது புத்தி சாலித்தனமாகாது" என்றான். இப்படியாக, இந்தியாவில் அன்னியர் ஆதிக்கத்தை வெறுத்து அதை வேரறுக்கும் பணியில் தன் உயிரையே அர்ப்பணம் செய்தான் சுத்த வீரனான திப்பு.

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.